சுதந்திரன்
SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, ஐப்பசி 26 உ (11-11-73) ஞாயிறு ஷவ்வால் ஆகிர் 15—புத்தகம் 27 இதழ் 11

# ‘இலங்கை தமிழர்கள் வேண்டாத குழுவினரா?’

## ‘இலண்டன் ஒப்சேவர்’ ஏட்டின் காரசாரமான கேள்வி!

### இலங்கைத் தூதரக அதிகாரிக்கும் சுடச் சுடப் பதில்!

**இலங்கையிலுள்ள தமிழ் மக்களின் பிரச்சினையை மூடிமறைத்து இருட்டடிப்புச் செய்ய முயன்ற இலண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் வர்த்தகப்பகுதி ஆணையாளருக்கு ‘இலண்டன் ஒப்சேவர்’ ஏட்டின் ஆசிரியர் அண்மையில் சுடச் சுடப் பதிலளித்துள்ளார்.**

இலங்கையில் தேயிலை, ரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் தமிழ்த் தொழிலாளர்கள், இலங்கை அரசின் கீழ் பிரிட்டிஷ் கம்பெனிகளின் நிர்வாகத்தில் எவ்வளவு மிருகத்தனமாகவும் கேவலமாகவும் கொடூரமாகவும் நடத்தப்படுகிறார்கள் என்பதை விளக்கும் டெலிவிசன் படமொன்று 23.9.73ல் இலண்டனில் திரையிடப்பட்டது.

மலையகத் தமிழர்களின் மிகக் குறைந்த சம்பளம், சிறிய கூட்டினுள் அவர்கள் நடத்தும் குடும்ப வாழ்க்கை, இராப்பகலாக வேலை, முதலாளிகளின் தொல்லைகள், போன்று அவர்கள் அனுபவிக்கும் கொடுமைகளை சித்திரித்துள்ள இப்படத்தில், பௌத்த சிங்களவர், தமிழ் இந்துக்களை கொடுமைப் படுத்தி வேலைவாங்குவதாக காட்டப்பட்டுள்ளது.

இந்தடெலிவிசன் நிகழ்ச்சி பார்ப்போர் மனதை உருக்கி நெகிழச் செய்வதாயமைந்திருந்தது. இந்த டெலிவிசன் நிகழ்ச்சிகளைப்பார்த்த ஆங்கிலேயரில் சிலர் தாம் இலங்கைத் தேனீரைப் பருகுவதை நிறுத்திவிட்டதாகவும், வேறு சிலர் இலங்கை அரசின் இந்தச் செயலுக்கு மனம் வருந்துவதாயும், இன்னும் பலர், இந்தியத் தமிழரை அங்கு கொண்டு சென்ற பிரிட்டிஷ் அரசாங்கம்தான் இப்பிரச்சினையில் தலையிட்டு தீர்வுகாண முன்வரவேண்டுமென்றும் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தனர்.

இதையொட்டி, 23.9.73 ‘இலண்டன் ஒப்சேவரும்’ ‘இலங்கையில் பட்டினியால் வாடும் தேயிலைப் பெண்கள்’ எனும் தலைப்பில் ஒரு கட்டுரையையும் வெளியிட்டிருந்தது.

‘இலண்டன் ஒப்சேவரில், வந்த கட்டுரையும், டெலிவிசன் நிகழ்ச்சியும், இலண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் நெஞ்சை உறுத்தியிருக்கவேண்டும். இதன் காரணமாக இலங்கைத் தூதரகத்தில் வர்த்தக ஆணையாளராக இருக்கும் திரு. எஸ். சி. நாணயக்காரா, இலண்டன் ஒப்சேவருக்கு ஒரு மறுப்புக் கடிதம் எழுதினார். அக்கடிதம், 7-10-73 இலண்டன் ஒப்சேவர் இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

தமது மறுப்புக் கடிதத்தில், ‘இலண்டன் ஒப்சேவரில்’ வெளிவந்த குறித்த கட்டுரையும், டெலிவிசன்படமும், பிரிட்டிஷ் கம்பெனிகளுக்கு சொந்தமான இலங்கையின தேயிலைத் தோட்டங்களில் நிகழும் இத்தகைய சம்பவங்களுக்கு இலங்கை அரசும் உடந்தையாக இருப்பது போன்ற மனோபாவத்தை ஏற்படுத்திவிடுமென்றும், இந்தியத் தமிழ்த் தொழிலாளர்களை இலங்கை மக்களின் எதிர்ப்பின் மத்தியில் பிரிட்டிஷ் தேயிலைக் கம்பெனிகளே இலங்கைக்கு கொண்டுவந்தனவென்றும், இலங்கை சுதந்திரமடைந்த போது ஒன்பது இலட்சம் இந்தியத் தமிழர்கள் இருந்தார்கள் என்றும் அவர்களை இலங்கை ஏற்றுக்கொள்வது இலங்கையின் பொருளாதாரத்துக்கு இணங்கிவராதென்றும், இந்திய அரசும், இலங்கை அரசும் இந்த மக்களை ஏற்றுக்கொள்ளும்படி பிரிட்டிஷ் அரசைக் கோரியிருக்கலாமென்றும், அப்படிச்செய்து கசப்பைவளர்க்காது இரண்டு நாடுகளும் ஒரு ஒப்பந்தத்திற்கு வந்து இந்த மக்களின் பிரச்சினைக்கு தீர்வு கண்டுள்ளதாகவும் கூறியிருக்கிறார் திரு. நாணயக்கார.

“பலநூற்றுண்டுகளாக இலங்கையின் சிங்கள பௌத்த பெரும்பான்மையினருக்கும் இந்து தமிழ் சிறுபான்மையினருக்குமிடையே இருந்துவரும் கசப்புணர்வை மையமாகக் கொண்டுபார்க்கும்போது சிங்களவர் ஆதிக்

(5-ம் பக்கம் பார்க்க)

## ‘முத்துவிழா’ காணுகின்ற மூதறிஞர் வாழியவே!



தமிழுக்கும், தமிழர்க்கும் தமிழ் நாட்டின் முன்னேற்றத்துக்குமாக கடந்த 55 ஆண்டுகளாக பணி புரிந்து வரும் முத்தமிழ்க் காவலர் மூதறிஞர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களின் 75ம் ஆண்டு ‘முத்துவிழா’ இத்திங்கள் 10ம் நாளிலிருந்து 25ம் நாள்வரை—16 நாட்களுக்கு திருச்சியின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெறுகிறது.

தமிழ் மரபுப்படி பேறு 16. அவர் எழுதியிருக்கின்ற ‘தமிழின் சிறப்பு’ என்னும் நூலிலுள்ள அதன் சிறப்பும் 16. அவர் வெளியிட்டுள்ள நூல்களும் 16. அவரும் அவரது குடும்பத்தில் 16வது குழந்தை. இந்தக் காரணங்களினால், அப்பெருமகனது முத்துவிழாவை, 16 நாட்கள் 16 இடங்களில் 16 துறையினர் அவர் பிறந்த மண்ணான திருச்சியில் கொண்டாடுகின்றனர்.

தமிழகப் புலவர் குழுவினர் 11—11—73 ஞாயிறு காலை திருச்சியிலுள்ள தேவர் மன்றத்தில் முத்துவிழாவை தொடக்கிவைக்கின்றனர். இந்த நிகழ்ச்சியில் சென்னை, மதுரை, கோவை, அண்ணாமலை நகர், ஆகிய தமிழகத்திலுள்ள நான்கு பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் நால்வரும் பங்குபற்றுகின்றனர். கடைச்சங்க காலத்தைப்போன்று இக்காலத் தமிழகத்திலுள்ள 49 புலவர் பெருமக்கள் முதுபெரும் புலவர் விசுவநாதம் அவர்களுக்கு வாழ்த்துரை வழங்குகின்றனர்.

ஈழத்தமிழ் மக்கள் முத்தமிழ்க்காவலரை நன்கு அறிவார்கள். ஈழத்தமிழ் மக்களின் நல்வாழ்வில் அக்கறையும், ஆர்வமும் கொண்ட தமிழகத்தலைவர்களில் திரு. விசுவநாதம் குறிப்பிடத்தக்கவர். இலங்கைத் தமிழர் பிரச்சினையில், இந்திய அரசு தலையிட்டு, நீதி கிடைக்க வழி செய்யாவிடின், இந்தியத் தமிழர்கள் கடல் கடந்து சென்று ஈழத்தமிழருக்கு உதவ வேண்டிய அவசியம் ஏற்படும் என்று அண்மையில் கூட கர்ச்சித்தவர் திரு. விசுவநாதம் என்பதை தமிழ் மக்கள் அறிவார்கள்.

தமிழிலக்கியத்தில் ஆழ்ந்த புலமையும், வள்ளுவர் வகுத்த அற வாழ்வுக்கு இலக்கணமாயமைந்த தூய வாழ்வும், எளிமையும் கண்டிப்பும் கொண்ட முத்தமிழ்க்காவலர் இந்தியை எதிர்த்துச் சிறை சென்ற தியாகசிலருமாவர். சுருக்கமாக கூறப்போனல், தமிழ் வாழ்வு வாழுகின்ற அவர் ஒரு நிறை குடம்.

முத்துவிழாக் காணுகின்ற முத்தமிழ்க்காவலர் அவர்களின் பாதங்களில் 35 இலட்சம் ஈழத்தமிழ் மக்களின் சார்பிலும், சுதந்திரன் சார்பிலும், நம் சார்பிலும் இதயம் கனிந்த வாழ்த்து மலர்களை தூவி மகிழ்கின்றோம்.

—— ஆசிரியர்.

## உதைத்துத் தள்ளப்பட்ட பின்னரே உண்மை புரிகிறது கம்யூனிஸ்டுகளுக்கு!

### மொழியுரிமை வழங்காமல் உணவுற்பத்திக்கு தமிழ் மக்களை அழைப்பதில் அர்த்தம் இல்லையாம்!

ஐக்கிய முன்னணி அரசிலிருந்து உதைத்துத் தள்ளப்பட்ட பின்னர், இப்போதுதான் விக்கிரமசிங்கா தலைமையிலான கம்யூனிஸ்டுகளுக்கு, இந்நாட்டில் தமிழினம் என்று ஒன்றிருப்பதும், அந்த இனத்தின் உரிமைகளை வழங்காமல், அரசு இழுத்தடித்து வருகிறதென்பதும் புரிய ஆரம்பித்திருக்கிறது.

விக்கிரமசிங்கா கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரபூர்வமான ஏடான தேசாபிமானி 3. 11. 73 இதழில் பின்வருமாறு எழுதியிருக்கிறது:—

“இந்நாட்டிலுள்ள தேசிய சிறுபான்மை இனத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எதையுமே எடுக்காமல், அவர்களின் நல்லெண்ணத்தைப் பெறலாம் என்று மூளையுள்ளவர்கள் நிச்சயமாக நினைக்கமாட்டார்கள்.

‘தமிழ் பேசும் மக்கள் இந்த நாட்டின் இரண்டாவது பெரிய இனம் என்பதையும் அவர்கள் சரித்திரகாலம் தொட்டு இந்த நாட்டின் ஒரு பகுதியில் நிரந்தரமாக வசித்துவருகிறார்கள் என்பதையும் அங்கீகரிப்பதில் தயக்கம் காட்டும் எந்த அரசாங்கமும் தமிழ் பேசும் மக்களின் நல்லெண்ணத்தைப் பெற முடியாது.

“இன்றைய அரசாங்கம் இந்த இரண்டு உண்மைகளையும் அங்கீகரிக்கிறதா?

“அங்கீகரிக்கிறதென்றால்—தமிழ் பேசும் மக்களின் மொழிப் பிரச்சினை இந்த அளவுக்கு இழுபறிப்பட்டுக் கொண்டிருக்காது. தமிழ் மக்களின் மொழி யுரிமையைப் பற்றிய அக்கறையே இல்லாமல் உணவு உற்பத்திக்கு வரும்படி அவர்களை அறைகூவி அழைப்பதில் அர்த்தமில்லை.

“மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அந்நிய செலாவணி தேவையில்லை”

— இவ்வாறு அந்த ஏடு எழுதியுள்ளது.

## சுயாட்சிக் கழகத்திலிருந்து வெளியேறினார்கள்!

தமிழரசுக் கட்சி, அதன் 12 வது மாநில மாநாட்டில் தன்னுட்சிக் கொள்கையை ஏற்றுக்கொண்டு விட்டதால் சுயாட்சிக் கழகம் மீண்டும் தமிழரசுக் கட்சியுடன் இணைய வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை சுயாட்சிக் கழகத் தலைவர் ஏற்றுக்கொள்ள மறுத்த காரணத்தினால், புங்குடுதீவு சுயாட்சிக்கழகக் கிளையின் செயலாளர் திரு. எஸ். கே. மகேந்திரன். மேற்படி கிளையின் தலைவர் திரு. க. சிவநாமம், துணைத் தலைவர் திரு. நா. இராசதுரை மற்றும் மேற்படி கிளையைச் சேர்ந்த திருவாளர்கள். எஸ். கே. சிறீஸ்கந்தராசா, சு. இராசகுலசிங்கம், சி. சசிகாந்தன், இரா. கந்தசாமி, கு. சண்முகலிங்கம், ஐ. குலேந்திரன் ஆகியோர் சுயாட்சிக் கழகத்திலிருந்து வெளியேறியுள்ளனர்.

அவர்கள் தமது ராஜினுமா சம்பந்தமாக சுயாட்சிக் கழகத் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் அடுத்த வாரம் சுதந்திரனில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்




க. திருசெந்தூர்,
காங்கேசன்துறை.

கே: தமிழ்ப்பகுதியிலுள்ள இ. போ. ச. பேருந்துகளில் 'டிப்போ' பெயர் தமிழிலும் இருக்க திருக்கோணமலை 'டிப்போ' பேருந்துகளில் மட்டும் 'டிப்போ' பெயர் தனிச்சிங்களத்தில் இருக்க காரணம் என்ன?

ப: திருகோணமலையை சிங்கள நாடாக அரசு இப்போதே மானசீகமாக கருதத் தொடங்கி விட்டதுதான்!

ஃ

சிவா செல்லையா,
கோதண்டர் நொச்சிக்குளம்
வவுனியா.

கே: வன்னித் தமிழ் மக்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: மானம் ஒன்றே பெரிதெனக்கொண்டு வாழும் பண்டாரவன்னியனின் வாரிசுகள்! செல்லத்தம்பு எனும் புதிய பண்டாரவன்னியனின் கீழ் தமிழ் ஈழம் அமைக்க களத்தில் குதித்திருக்கும் வீரர்கள்!

ஃ

செ. மாணிக்கவாசகர்,
வவுனியா.

கே; அண்மையில் சட்டக் கல்லூரி மாணவர்கள் முன்னே கான மயில் ஆடியதல்லவா? கண்டிருந்த வான் கோழியும் தன் பொல்லாச் சிறகை விரித்து ஆட முயன்றபோது சகிக்க முடியாத மாணவர்கள் ஆட்டம் தொடர முடியாத படி ஆக்கி விட்டார்களாமே? வட்டுக் கோட்டை வாக்காளர்கள் இந்தக் கண்றாவியை நேரில் பார்க்க ஏற்பட்டால் என்ன செய்திருப்பார்கள்?

ப: தாங்கள்விட்டதவறை நினைத்து இரத்தக் கண்ணீர் வடித்திருப்பார்கள்!

ஃ

செல்வி. சந்திரா நாதன்,
சண்டிலிப்பாய்.

கே: தமிழர் கூட்டணி எம். பிக்கள், 'பட்டலையைத் திறந்தாலும் எம்.பி. கூடலைக் குப் போனாலும் எம். பி.' என்ற பெயருக்கு ஆசைப் படுகிறார்களே தவிர தமிழ் மக்களுக்காகப் பாடுபடத் தகுதியில்லாதவர்கள் என்று சிலர் கூறித்திரிகிறார்களே.

ப: தகுதி இருப்பதனால் தான் தமிழ் மக்கள் அவர்களை 'எம். பி.' ஆக்கி வைத்திருக்கிறார்கள். தகுதி இல்லாவிட்டால், நீக்கிவிடவும் மக்களால் முடியும் — நாக்கில் நரம்பற்றவர்கள் எதையும் கூறுவார்கள்—விட்டுத் தள்ளுங்கள்!

ஃ

சி. பூபாலராசா,
துரை வீதி, முள்ளியவளை.

கே: தமிழனுக்கு தனி ஆட்சி கிடைத்து விட்டால், 'சிங்கள மந்திகளின்' ஆட்சிக்கு வால்பிடித்துத் திரியும் ஒரு சில தமிழ்த் துரோகிகள் யாரிடம் சரணடைவார்கள்?

ப: ஒருவேளை தூக்குக்கயிற்றிடம் தான் சரணடைய நேரிடுகிறதோ யாருக்குத் தெரியும்?

ஃ

சி. இராஜேஸ்வரன்,
யாழ்ப்பாணம்.

கே. அரசாங்கம் 'கிருஷிக' என்னும் சொல்லை விவசாயம் என்பதற்காக பாவித்து வருகின்றதே! இச்சொல் தமிழ் சொல்லா? அல்லது சிங்கள சொல்லின் உருப்பெயரா?

ப: சிங்களச் சொல்லின் உருப்பெயர்தான் 'கிருஷிக' இதன் மூலம் சமஸ்கிருதம் தம்! தமிழ்ச் சொல் விவசாயம் தான்!

கே: யாழ் பொதுசன நூலகத்தில் 'இலண்டன் முரசை' நிறுத்தியதன் காரணம் யாதோ?

ப: யாழ் நூல் நிலைய நிர்வாகத்துக்கு தமிழுணர்ச்சியுள்ள ஏடுகள் வேம்பெனக் கசக்கிறதுபோலும்!

ஃ

எஸ். மகேஸ்வரி,
நீராவியடி.

கே: தன் இனத்துக்கு துரோகம் செய்பவர்களின் மறுபிறவி என்னவாக விருக்கும்?

ப: நிச்சயம் மறுவுள்ள (இழுக்குள்ள) பிறவியாக இருக்கும்.

கே; மாணவர்களும் சட்ட மறுப்பு இயக்கங்களில் பங்கு பற்றலாமா?

ப: பங்குபற்றலாம் — அழைப்பு வரும்போது!

ஃ

நா. சோமகாந்தன்,
185, டிம்புல வீதி, கற்றன்.

கே: 'இலங்கையில் தமிழரசு நிறுவப்பட்டபின் மலையகத் தமிழர் நிலை என்ன? தமிழ் ஈழ நாட்டின் குடி மக்களாக நிலம், வீடு மற்றும் வாழ்க்கை வசதிகள் வழங்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப் படுவார்களா என்று என் மலையக நண்பர் கேட்கிறார். அவரின் சந்தேகத்தை நீக்குவீர்களா?

ப: நிச்சயம் தமிழரசின் கீழ் சமத்துவம் தன்மானமுள்ள மக்களாக மலையகத் தமிழர் தலைநிமிர்ந்து வாழ முடியும். இப்போதே தமிழ் ஈழத்தில் குடியேற அவர்கள் முயற்சி எடுக்க வேண்டும்.

ஃ

சி. மாணிக்கவாசகர்,
வர்த்தகவிளான்,
தெல்லிப்பளை.

கே: தமிழ் இளைஞர்களைத் தட்டியெழுப்ப அமிர் அண்ணவைப்போல் வேறுயாரும் முன்வரமாட்டார்களா?

ப: ஒவ்வொரு தமிழ் இளைஞனும் வீர சுதந்திர உணர்ச்சி கொண்டு எழுந்து விட்டால், தட்டியெழுப்பவேண்டிய அவசியமேயிருக்காதே!

கே: ஓட்டறை வீரன் அம்மையாரின் கால் நக்கி களைத்துப் போய் விட்டாராமே...?

ப: அப்படி நக்கியபடியால் தானே இப்போது புதிய பதவியொன்று கிடைத்திருக்கிறது!

ஃ

தமிழ்ச்செல்வன்,
உசன், மிருசுவில்.

கே: தமிழ் இளைஞர் பேரவையில் அங்கத்தவனுக சேருவதற்கு யாருடன் தொடர்பு கொள்ள வேண்டும்?

ப: தமிழ்இளைஞர்பேரவை 90, இரண்டாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குதொடர்பு கொள்ளுங்கள்!

கே: எமது கிராமத்தில் தமிழர் கூட்டணிக் கிளையொன்றை அமைக்க விரும்புகிறேன் — அதற்கு என்ன செய்யவேண்டும்?

ப: உங்கள் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரைக் கண்டு இதுபற்றிப் பேசுங்கள்!

ஃ

நீ. ஜெயகிருஷ்ணன்,
உடகெரவித்த,
இரத்தினபுரி.

கே: சுதந்திரன் எத்தனை வருடமாக வெளிவருகின்றது?

ப: 1-6-1947இல் இருந்து சுதந்திரன் வெளிவந்து கொண்டிருக்கிறது!

ஃ

சி. மாயவன்,
(ஊர் குறிப்பிடப்படவில்லை)

கே: குறிப்பிட்ட சில தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்களைத்தவிர மற்றையவர்கள் தூங்குகிறார்களா என்ன?

ப: அப்படியாராவது தூங்குவார்களானல்—அவர்கள் நிச்சயம் தமிழ் மக்களால் தூக்கியெறியப்படுவார்கள்!

கே: தமிழ் இளைஞர் பேரவையில் எத்தனை இளைஞர்கள் தொண்டாற்றுகிறார்கள்?

ப: வரதராஜா, தவராஜா புஷ்பராஜா, பிரான்சிஸ், சரவணபவன் ஆகிய ஐந்து தம்பிகள் இந்த இளைஞர் பேரவையை இயக்கி வருகிறார்கள். இவர்களுக்கு உதவியாக இருந்து செயலில் ஈடுபட்டிருக்கும் இளைஞர்களோ பல நூறு பேர்!

---

குயுக்தியாரிடமிருந்து பதில் பெற விரும்பும் வாசகநேயர்கள் தவறுமல் பின்வரும் முகவரியை அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி அனுப்பும் படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

திருவாளர் குயுக்தியார்,
மே/பா.
சுதந்திரன்
த. பெ. இல. 1183
கொழும்பு.

---

## பிரார்த்தனையும் வைத்திய ஆலோசனையும்

காலரா நோய் அபாயத்திலிருந்து மக்களைக் காப்பாற்றும்படி இறைவனை வேண்டுதல் செய்யும் ஓர் பிரார்த்தனைக் கூட்டமும், காலரா ஏற்படாமல் தடுக்கும் வழிவகைகளை விளக்கும் வைத்திய ஆலோசனைக் கூட்டமும் கொழும்பு கும்பனித் தெரு சைவ முன்னேற்ற சங்கத்தின் ஆதரவில் 10-11-73 சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு மேற்படி சங்க நால்வர் சமய பாடசாலை மண்டபத்தில் திரு. வே. கந்தசாமி தலைமையில் நடைபெறுகிறது.

---




## 'நற்போக்கு' எழுத்தாளரும் கண்ணதாசனும்

முற்போக்கு எழுத்தாளர்களிடம் கூழ்முட்டையடிபட்டு அதன் காரணமாக 'நற்போக்கு' எழுத்தாளராக தம்மை மாற்றிக்கொண்ட ஒருவர் அண்மையில் தமிழ்நாட்டில் சுற்றுப்பயணம் செய்துவிட்டுத் திரும்பியிருக்கிறார்.

இவரது எழுத்தாற்றலையோ, இலக்கியத் திறனையோ நான் எப்போதும் குறைத்து மதிப்பிடுபவனல்ல; அவரது ஆற்றலுக்கு என்றும் தலைவணங்குபவன்! தமிழ்நாட்டிலுள்ள ஜெயகாந்தனையும் இவரையும் நான் எப்போதும் ஒப்பிட்டுப் பார்ப்பது வழக்கம்;

ஆனல் இலக்கியத்துடன் இவர் நின்றிருந்தால் பரவாயில்லை; தமிழ் நாட்டுக்கு சென்றபோது தாம் கவிஞர் கண்ணதாசனை சந்தித்து இலங்கைத் தமிழர்களின் அரசியல் பிரச்சினை பற்றி பேசியதாக இங்கு தமது நண்பர்களிடம் கூறினராம்!

கவிஞரிடம் என்ன கூறினர் என்கிறீர்களா?

இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி கவிஞருக்கு தவறுன தகவல் தரப்பட்டிருப்பதாகவும், கவிஞர் கருதுவதுபோல இலங்கைத் தமிழர்களின் உரிமை பறிக்கப்பட்டிருக்கவில்லையென்றும், அரசியல் சட்டத்தில் தமிழுக்கு எல்லாவித உரிமைகளும் அளிக்கப்பட்டிருப்பதாகவும் இவர் கூறினராம்— அதைக் கவிஞரும் நம்பி ஏற்றுக்கொண்டு, இலங்கைத் தமிழர் பிரச்சினையையொட்டி தாம் எந்தவித நடவடிக்கையிலும் இனிமேல் ஈடுபடப்போவதில்லையென்று இவருக்கு வாக்குறுதி யளித்தாராம்!

—இப்படி இந்த 'நற்போக்கு'வாதி இங்கு 'பீத்திய' பின்னர்தான், சென்ற அக்டோபர் 3ம் நாள் கவியரசு கண்ணதாசன் தலைமையில் மவுண்ட் ரோடு தபால் அலுவலகம் முன்னிலையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி ஆர்ப்பாட்டம் நடைபெற்றிருக்கிறது:-

இவரது கூற்றுக்கு கவியரசு கண்ணதாசன் எவ்வளவு தூரம் செவிசாய்த்திருக்கிறார்— பார்த்தீர்களா?

ஃ ஃ ஃ

## ஏறிவந்த ஏணியை உதைக்கும் இலக்கிய 'எத்தர்கள்'

ஏறிவந்த ஏணியை எட்டி உதைப்பதிலும், நன்றிகெட்ட நடிக்கக்குழுத் தறுப்பதிலும் வல்லவர்கள் கம்யூனிஸ்டுகள் என்பது உலகறிந்த உண்மை. இந்தக் கம்யூனிஸ்ட் இயக்கத்தவர்களான 'முற்போக்கு' எழுத்தாளர்கள் என்று தம்மைக் கூறுவோர் மட்டும் இதற்கு விதிவிலக்கானவர்களா என்ன?

இன்றைய நாடறிந்த முன்னணி எழுத்தாளர்கள் அனைவரும் எழுதிப் பழகி, எழுத்தாளர்களாக வளர்வதற்கு ஆரம்பத் தொட்டிலாக இருந்தது சுதந்திரன் என்பது இலக்கிய உலகு அறிந்த மறுக்க முடியாத உண்மை. இன்று 'முற்போக்கு' எழுத்தாளர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்வோர் அனை[illegible] சுதந்திரன் பண்ணையில்தான்!

இந்த உண்மையை மறந்துவிட்டு — அல்லது மறைத்துவிட்டு — யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'பாதுகை' திருடரின் பத்திரிகையொன்று இன்றைய எழுத்தாளர்களை உருவாக்கியது முற்போக்கு எழுத்தாளர் சங்கமே என்று திரும்பத் திரும்ப எழுதிவருகிறது!

இது, எப்படித்தான் கரடியாகக் கத்தினுலும்— இன்றைய பழம்பெரும் தமிழ் எழுத்தாளர்கள் தாம் வளர்ந்த இடம் எதுவென்பதை தம் நெஞ்சகத்திலிருந்து மறக்கமாட்டார்கள், ஏனெனில் நன்றி மறப்பது தமிழன் பண்பாடு அல்ல!

ஃ ஃ ஃ

## சிரித்திரன் பத்தாவது ஆண்டு மலர்!

பத்தாண்டுகள்தொடர்ந்துஒருசஞ்சிகையை நடத்துவதென்றல், ஈழத்து இலக்கிய உலகில் அது ஒரு பெரிய சாதனைதான். அந்தச் சாதனையை நிலைநாட்டியிருக்கிறார் சிரித்திரன் ஆசிரியர் நண்பர் சிவஞானசுந்தரம்.

ஆம், சிரித்திரன் பத்தாவது ஆண்டுமலர் 75 பக்கங்களில் அழகாக வெளிவந்துள்ளது. பத்தாண்டு கால சிரித்திரனில் வெளிவந்துள்ள மறக்கமுடியாத நகைச்சுவைப் படங்களும் மற்றும் சில அம்சங்களும் தொகுத்துத் தரப்பட்டுள்ள இம்மலரில், நகைச்சுவைகள், துணுக்குகள், சிறுகதைகள், என்று பல சுவைகளும் நிறைந்துள்ளன.

இந்திய சஞ்சிகைகள் இறக்குமதியை கட்டுப்படுத்திய பின்னர்தான் சிரித்திரன் விற்பனை பெருகியுள்ளதாக அண்மையில் ஒரு க(ல்)லாநிதி உளறிக்கொட்டியிருந்தார்.

இந்திய சஞ்சிகைகள் சிரித்திரனுக்கு போட்டியாக இருப்பதாக நண்பர் சிவா என்றுமே குறைப்பட்டு நான் கேட்டதில்லை. ஏனெனில் தன்னுடைய சுய ஆற்றலிலும், அறிவிலும் திறனிலும் அவருக்கு நம்பிக்கையுண்டு.

இந்திய சஞ்சிகைகள் நிறுத்தப்பட்டதால் தான் சிரித்திரன்விற்பனை அதிகரித்தது என்று கூறுவதுசிரித்திரனுக்கே அவமானம். இந்திய சஞ்சிகைகள் தங்கு தடையின்றி வந்துகொண்டிருந்தபோதே சிரித்திரன் மக்களிடையே நல்ல செல்வாக்குப் பெற்றிருந்திருக்கிறது!

தன்னுடைய திறமையையும், வாசகர்களின் ஆதரவையும் மட்டுமே நம்பி, சிரித்திரனை தொடர்ந்து வெற்றிகரமாக வெளியிடும் சிவாவுக்கு வாழ்த்துக்கள். சிரித்திரன் மலர் விலை ரூபா 2/25ஆனலும் பரவாயில்லை— கொடுத்துவாங்கி வாசித்தால் அது கொள்ளைமலிவு என்பது புரியும்.

ஈழத்தில் நின்று நிலைத்து வாழும் சஞ்சிகைகளில் கதம்பத்துக்கு அடுத்த இடத்தை சிரித்திரன் பிடித்துவிட்டது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர் எம். ஜி. ஆர். இலண்டன் முரசு!

'இலண்டன் முரசு' எனும் ஏட்டிற்கு அண்ணா தி. மு. க. தலைவர் மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக அண்மையில் அளித்திருந்த பதிலையொட்டி சுதந்திரன் வாசகர்கள் பல்வேறு கருத்துக்களையும் தெரிவித்திருந்தார்கள். அந்தப் பிரச்சினையை 21. 10. 73 சுதந்திரனுடன் முடித்திருந்தோம். ஆயினும், இலண்டனிலிருந்தும் உள்ளூரிலிருந்தும் மேலும் சிலவாசகர்கள் இது குறித்து கடிதங்கள் எழுதியுள்ளதால், அவற்றை நிராகரிக்கமுடியவில்லை. வாசகர்களே சுதந்திரனின் எஜமானர்கள் அல்லவா? எனவே அவற்றை இங்கு பிரசுரித்துள்ளோம்!

— ஆசிரியர்

## இலண்டன் வாசகர் ஒருவரின் கடிதம்!

ஆசிரியர்
சுதந்திரன்
கொழும்பு,

ஐயா,

7—10—73ல் வெளியான சுதந்திரன் இதழில் ''மக்கள் குரல்'' பகுதியைப் படித்தேன். அதிலே பிரசுரமான திரு. க. யோகநாதனின் ''லண்டன் முரசும் எம். ஜீ. ஆரும்—சில விளக்கங்கள்'' என்றபகுதி எனக்கு மிகவும் சிரிப்பூட்டியது. எம் ஜீ. ஆர் கூட்டம் லண்டனில் ஒருதனி நபரின் அறையில் நடந்ததல்ல. பகிரங்கமாக இந்தியவை. எம். சி. ஏ. மண்டபத்தில் சுமார் முந்நூறு பேர் முன்னிலையில் நடைபெற்றது. அந்த முந்நூறு பேருமே தங்கள் காதால் எம்.ஜீ.ஆர் சொன்ன அனைத்தையும்கேட்டார்கள். நானும் அங்கிருந்தேன். பேச்சை நேரிலே கேட்ட எங்களுக்குத்தான் லண்டன் முரசு சரியா? பிழையா? என்பது தெரியும். உண்மையை அறிந்த நாங்கள் இருக்கும் போது எங்கோ ஒரு மூலையில் கண்ணை மூடிக்கொண்டு எம். ஜீ. ஆர் தான் தெய்வம் என்று பிரார்த்தனை செய்யும் சோம்பேறிகள் லண்டன் முரசை — மதிப்பான ஒரு சஞ்சிகையை — கட்சிச்சார்பற்ற அனைத்துலகப் பத்திரிகையை—உலகத்தின் எல்லா மூலைகளிலும் இருக்கும் தமிழர்களின் ஒவ்வொரு மூச்சுக்கும் செவிசாய்க்கும் ஏட்டை ஏதோ தினம் ஒன்றாக முளைக்கும் பத்திரிகைகளோடு ஒப்பிட்டுக் கொதித்தெழுவது சிரிப்பைத் தராமல் வேறு என்னத்தைத்தரும்? நீங்களே சொல்லுங்கள்.

கூட்டத்திலே இருந்த மக்களிலே பலர் எம். ஜீ. ஆரின் பரம்பரை இரசிகர்கள். அவர்களின் முகத்திலே சுயாடவில்லை. ஏமாற்றந்தான் மிஞ்சி நின்றது. முழுவதையும் லண்டன் முரசு போடவில்லையே என்று கேட்கிறார் திரு. யோகநாதன். முழுமையாகப்போட்டிருந்தால்திரு. யோகநாதனே கொதித்தெழுந்திருப்பார் எம். ஜீ. ஆருக்கு எதிராக. செப்டெம்பர் லண்டன் முரசு இதழில் இருபதாம் பக்கத்தில் இருக்கும் ஆசிரியர் குறிப்பை யோகநாதன் படிக்கவில்லையா? அல்லது படித்தும் புரியவில்லையா?

இப்படிக்கு
க. ஜெ. பிள்ளை
I, Ethelbert Road
London S. W. 20

ஃ

23. 9. 73 சுதந்திரன் பத்திரிகையில் ''எம். ஜீ. ஆரும் இலண்டன் முரசும்'' என்ற தலைப்பை பார்த்தேன். பார்த்து முடிக்குமுன் பிரமை பிடித்தவன் போலாகிவிட்டேன்—ஏன் என்றால் இவ்வளவு காலமும் எம். ஜீ. ஆரை எமது தலைவர்களில் ஒருவராக போற்றி வந்தோம்.

கொடைவள்ளலாகவும் மக்கள் திலகமாகவும் மனதில் நினைத்து புரட்சிவீரனை போற்றி வந்தோம். அவரா இப்படி சொன்னார்? நம்புவதா? நம்பாமலும் இருக்க முடியவில்லை.

ஈழத்தமிழர் விடுதலை இயக்கத்தில் பங்கு கொள்ளும் இலண்டன் முரசில் வதந்திகளை போடமாட்டார் என்று ஒரு நம்பிக்கையும் இருக்கிறது.

அன்று சுதந்திரன் செய்தி என்னைப்போல் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் மனதை மாற்றியிருக்கும் — ஆனால் இச்செய்தியை எம். ஜி. ஆர். சொல்லியிருப்பாரா என்பது கேள்விக்குறியாயிருப்பதால் எல்லோரும் யோசிக்க வேண்டியிருக்கிறது; உண்மை செய்தியாய் இருந்தால் எமது தமிழ் மக்கள் மத்தியில் எம். ஜி. ஆருக்கு இருக்கும் செல்வாக்கு குறையும் என்பது நிச்சயம்.

— பெ. சுப்பையா
போப்பிட்டிய தோட்டம்
பெல்மதுளை.

## மக்கள் குரல்

ஃ

சுதந்திரன் 7-10-73 இதழில் கோப்பாய் யாழ் மாவட்ட எம். ஜீ. ஆர். ரசிகர் மன்றைச் சேர்ந்த க. யோகநாதன் என்பவரால் மக்கள் குரல் என்ற பகுதியில் மக்கள் திலகத்தின் விடயம் பற்றி இலண்டன் முரசிற்கு கொடுத்த விளக்கத்துடன் சம்பந்தப் படுத்தி சில விளக்கங்கள் கொடுக்க விரும்புகிறேன்.

மேற்படி நண்பர் யோகநாதன் மக்கள் திலகத்தை மட்டந்தட்டும் நோக்கமாகவே லண்டன் முரசு செய்தி வெளியிட்டதாக எழுதியுள்ளார்.

மக்கள் திலகத்தையோ அல்லது வேறுயாரையுமோ, யாரும் மட்டந்தட்டமுடியாது. அப்படி மட்டந்தட்ட நினைப்பவர்கள் தங்களாலேயே மட்டந்தட்டப் படுவார்கள். உண்மையில் மக்கள் திலகம் இலண்டன் முரசில் கூறியபடி பேசவில்லையானால் — கூறவில்லையானால் 23-9-73 சுதந்திரன் இதழில் வெளியிட்ட கேள்விக்குத் தக்க மறுப்புச்செய்தி கொடுத்திருக்கலாமல்லவா?

நானும் ஒரு எம். ஜீ. ஆர். ரசிகரென்ற முறையில் இவற்றைக் கூறுகிறேன். அடுத்து அ. தி. மு. க. தமிழக ஆட்சியைக் கைப்பற்றப் போவதை தடுக்கமுடியாதென்றும் கூறியுள்ளார். நாம் இன்றைய நிலையில் தமிழ்நாட்டு அரசியலுடன் ஈழநாட்டு அரசியலை ஒப்பிடுவது சரியல்ல. தமிழ் நாடு ஆனாலும் சரி, ஈழநாடு ஆனாலும் சரி மலையாளியோ அல்லது வேறு இனத்தவர்களோ ஆளலாம். ஆனால் தமிழன் உரிமையுடன் வாழக் கூடியதாக இருந்தால் போதும்.

அடுத்ததாக 19-8-73 இலண்டன் முரசில் மக்கள் திலகத்தின் பதிலில் அரசியல்பற்றிக்கேட்டகேள்விக்கு 'தனக்கு (எம். ஜீ. ஆர்.) ஸ்ரீலங்காவில் சிங்கள இரசிகர்களும் இருக்கிறார்கள்' என்று கூறியதாக இருக்கிறது.

மக்கள் திலகத்தை அரசியலைப் பற்றிக்கேட்டதற்கு அதற்குள் கலையைப் புகுத்தித் தனது படத்தை இலங்கையில் திரையிடவேண்டுமென்ற நப்பாசையை ஏற்படுத்தியுள்ளார்.

உதாரணமாக நாம் கண்ணதாசனை எடுத்துப் பார்க்கும் பொழுது அவர் தமிழுக்காக தமிழ் மக்களுக்காக நியாயத்தை எடுத்துக் கூறியதற்கு அவர் இயற்றிய பாடல்களை இலங்கை வானொலியில் கேட்க இயலாதென்ற செய்தி வந்தது யாவரும் அறிந்ததே. அதே போல் மக்கள் திலகமும் தனது படங்கள் இலங்கையில் திரையிடப்படமாட்டாதென்று நினைத்திருந்தார் போலும். உண்மையை — நியாயத்தைக் கூறுவதற்கு ஏன் பயப்படுவான்?

மக்கள் திலகத்தின் படங்களை, மக்கள் திலகம் இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தால் இலங்கையில் திரையிட—இலங்கை அரசாங்கம் மறுத்தால் அதனால் ஏற்படும் விளைவுகள் யாரைப் பாதிக்குமென்பதையும் அரசாங்கம் அறிய வேண்டும். இதற்காக மக்கள் திலகம் உண்மையைக் கூற மறுத்தால் அவர் அண்ணாவின் வழியில் செல்பவர் — அண்ணாவின் கொள்கையில் நடப்பவர் என்று யாரும் கருதமாட்டார்கள்.

உண்மையான — நேர்மையான வழியில் சிங்கள இரசிகர்கள் கலையை மதிப்பவர்களானால் அரசியலையும், கலையையும் ஒன்றாகப் புகுத்தி ஈழத்தில் எம். ஜீ. ஆருக்கு இருக்கும் செல்வாக்கை அழிக்கமுடியாது.

நண்பர் யோகநாதன் கூறியது போல இல்லாது ஈழத்து அரசியல் நிலைவேறு ஆகும்.

மக்கள் திலகத்திற்கு ஒரு வேண்டுகோள்!

அறிஞர் அண்ணாவின் வழியில் நடக்கும் நீங்கள் ஈழத் தமிழனுக்கு இன்னல் நேர்ந்திருக்கும் வேளையில் பாராமுகமாக—உதாசினம்செய்து விட்டு இருந்தால் நிச்சயம் இலங்கைத் தமிழ் மக்களிடம் உங்களுக்கிருக்கும் செல்வாக்கு காலக்கிரமத்தில் அரசியல் ரீதியில் அற்றுப் போகுமென்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே 23-9-73ல் சுதந்திரன் 'மக்கள் திலகத்திற்கு இலங்கைத் தமிழ் மக்கள் சார்பில் ஒருகேள்வி' என்ற தலைப்பில் எழுதப்பட்டிருந்ததற்குத் தக்க பதிலை அளிப்பாரானால் தமிழ் மக்கள் அவருக்கு கடமைப்பட்டவராவார்கள்.

—செ. குலசேகரராசசிங்கம்,
—புன்னாலைக்கட்டுவன் வடக்கு

## சாதி ஒரு சரித்திர சாபக்கேடு! வேரோடு கெல்லியெறிவோம்

நாட்டிலே உள்ள சாதிகளை மனிதன்தான் படைக்கிறான். ஆனால், தான் படைப்பதாகச் சொன்னால் யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்று சாதிகளைக் கடவுள் படைத்ததாகச் சொன்னான்; அதற்கு ஒரு கதையையும் சொன்னான்.

பிரமாவினுடைய முகத்தில் பிறந்தவன் பிராமணன். பிரம்மாவினுடைய தோளில் பிறந்தவன் க்ஷத்திரியன், பிரம்மாவினுடைய தொடையிலே பிறந்தவன் வைசியன், பிரம்மாவினுடைய காலிலே பிறந்தவன், சூத்திரன் அதாவது நாமெல்லாம் காலிலே பிறந்தவர்கள்என்பது அவனுடைய கற்பனை; அதையே வாதத்திற்கு ஒப்புக்கொள்வதாக வைத்துக்கொள்ளுவோம். கடவுளுடைய உடம்பில் எல்லா அவயங்களும் ஒன்றுதான். இதில் எந்த அவயத்தில் யார் பிறந்தாலும் எல்லோரும் மனிதர்கள்தான்.

தமிழ் நாட்டில் ஒரு மரம் இருக்கிறது. அதற்குப் பெயர் அத்தி மரம். அதுபோன்று [illegible] பெயரில் உங்கள் [illegible]த்தில் கூட இருக்கலாம். அந்த மரத்தில் இலையிலும் காய் காய்க்கும். கிளையிலும் காய் காய்க்கும். அடிமரத்திலும் காய் காய்க்கும். வேரிலும் காய் காய்க்கும். எல்லாக் காய்களையும் அத்திக்காய் என்றுதான் சொல்லுவோம்; அதை விட்டுவிட்டு, உச்சியில் காய்த்த காயை ஆப்பிள் காய் என்றும், அடிமரத்தில் காய்த்த காயை திராட்சை என்றும், வேரிலே காய்த்த காயை ஆவக்காய் என்றும் சொல்ல மாட்டோம்.

அதைப் போலவே கடவுளுடைய உடம்பில் எந்த இடத்திலே பிறந்தாலும் அவன் மனிதனே தவிர, சாதிவாரியாக பிரிக்கப்படக் கூடியவன் அல்ல.

எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் எவ்வளவு வசதி, திறமை படைத்தவர்களாக இருந்தாலும் அவர்கள் சாதியின் பெயரால், தாழ்த்தப்பட்டவர், பின்தங்கியவர் என்ற பெயரால் ஒதுக்கப்படுவது நீண்டகாலமாக இருந்து வருகிறது.

தமிழ்நாட்டில் நந்தன் என்று ஒரு அரிசனபக்தன் இருந்தான். அவன் ஆண்ட[illegible] [illegible] [illegible] தான். அவன் தாழ்ந்த சாதி என்ற காரணத்தால் நெருப்பிலே குளித்துவிட்டு உள்ளே வரவேண்டுமென்று உத்தரவு போட்டார்கள். அவன் நெருப்பிலே குளித்தான். நெருப்பிலே குளித்த பின்பு வெளியே வந்தானா? வரவில்லையா? என்று எனக்குத் தெரியாது. (சிரிப்பு)

யாதவர்களுடைய கடவுளான கிருஷ்ணனைப் பற்றிக்கூட ஒருகதைசொல்லுவார்கள். அவன் திறமை படைத்தவன். பெரிய ராசதந்திரி என்றெல்லாம் புராணம் சொல்லுகின்றது. ஆனால் அவன் யாதவ வகுப்பைச் சேர்ந்தவன். ஆகவே ஷத்திரியர்கள் தான் நாட்டை ஆளலாம் என்று சொல்லி, அவனுக்கு ஆளும் உரிமை இல்லைஎன்று கூறிவிட்டார்கள்.

அதனால்தான் உத்தரப் பிரதேசத்தில் பிறந்த கிருஷ்ணன் இங்கே ராஜ்யத்தை அமைக்க முடியாமல், குஜராத்திற்குச் சென்று அங்கே 'துவாரகா என்ற புதிய ராஜ்யத்தை அமைத்தான். ஆக, சாதி வித்தியாசம் கிருஷ்ணன் என்ற அவதாரத்தையும் விடவில்லை.

மராட்டிய வீரன் சிவாஜியைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவன் எதிரிகளை முறியடித்தவன். மாபெரும் நாட்டை உருவாக்கியவன்; ஆனால் பட்டம் சூட்டிக் கொள்ளக்கூடாதுஎன்று உயர்சாதிக்காரர்களால் தடுக்கப்பட்டான். அவன் 'யாகம்' செய்து ஷத்திரியனாகமாறினால்தான் அரசாளத் தகுதி உடையவன் என்று சொல்லப்பட்டான். ஆகவே சாதி வித்தியாசம் சரித்திரக் காலம் தொட்டு இருந்து வருகின்ற ஒரு சாபக்கேடு!

ஒவ்வொருவனும் உயர்ந்த சாதிக்காரனாக ஆக ஆசைப்படக்கூடாது. எல்லோரும் மனிதர்களாக ஆக வேண்டுமென்றுதான் ஆசைப்படவேண்டும்.

சாதி ஒழிய, சமத்துவம் நிலைநாட்டப்பட இந்தியப் பூபாகத்தில் பல பெரியவர்கள் வழிகாட்டியிருக்கிறார்கள். அந்தப் பட்டியலில் காந்திஅடிகளை மறக்க முடியாது. அம்பேத்காரை மறக்க முடியாது. தமிழ்நாட்டில் பெரியாரை அண்ணாவை மறக்க முடியாது. பின்தங்கிய மக்களுக்காகப் பாடுபட ஒவ்வொருவரும் சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

—அலகாபாத்தில்கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி பேசியது—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# தமிழன் கடமை

நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு எதிர்வரும் சனவரித்திங்கள் 3ம் நாளிலிருந்து 9ம் நாள் வரை தமிழ் ஈழத்தின் திருநகரான யாழ்ப்பாணத்தில் கோலாகலமாக நடைபெறவிருக்கிறது.

இந்த மாநாட்டையொட்டி தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக்கிளையினரிடையே இதுவரை இருந்து வந்த கருத்துவேறுபாடுகள், அபிப்பிராய மோதல்கள் அனைத்தும் களைந்தெறியப்பட்டு விட்டன, ஒரே மனத்தினராய், மோதல்களும், பேதங்களுமின்றி ஈழத்தில் நடைபெறவுள்ள இந்த மொழி மாநாட்டை சிருடனும் சிறப்புடனும் வலிவுடனும் பொலிவுடனும் அடிப்படை உணர்வு மாறுபடாமல் நடத்தி முடிக்கக் கூடிய அறிவும் ஆற்றலும், தகுதியும் திறமையும் படைத்தவர்களைக் கொண்டதாக இப்போது தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக்கிளை இயங்கத்தொடங்கியிருப்பது ஈழத்தமிழர்க்கெல்லாம் குதூகலத்தையளிக்கக் கூடியதென்பதில் துளியும் ஐயமில்லை!

தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளைக்குள் 'எப்படியோ' நுழைந்து இடம்பிடித்திருந்த 'பெரிய மனிதர்கள்' என்று பெயரெடுத்தவர் சிற்சிலரது நடவடிக்கைகளினுல் இலங்கை வாழ் தமிழ் சமுதாயத்துக்கே இந்த மாநாட்டின் மூலம் எங்கே அவமானமும் அவமதிப்பும் ஏற்பட்டுவிடப்போகிறதோ என்று இருந்து வந்த அச்சம் அடியோடு அகற்றப்பட்டு விட்டது!

இன்றைக்கு, ஆழ்ந்த புலமையும் செயலூக்கமும், தமிழ் மொழி உணர்வும் நிரம்பப்பெற்ற பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையின் தலைமைப்பொறுப்பை ஏற்றிருக்கிருர்கள்; அவரது தலைமையின் கீழ் — தனிநாயக அடிகளாரின் வழிகாட்டுதலின் கீழ் — இயங்குகின்ற தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையில் ஆழ்ந்த தமிழ்ப்பற்றும், பல்துறை அறிவும்கொண்ட தூய தமிழ்தொண்டர்கள் பலர் பணியாற்றுகின்ற காரணத்தினுல் — நடைபெறவிருக்கின்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு ஈழத்தமிழர்களுக்கு எழுச்சியும் உணர்ச்சியும், சுவையும் பயனும் தரக் கூடிய ஓர் மாநாடாக அமையும் என்று நிச்சயம் எதிர்பார்க்கலாம்!

இந்த மாநாட்டிற்கென சுமார் 40 நாடுகளிலிருந்து முன்னூற்றுக்கு மேற்பட்ட அறிஞர்கள் வருகைதரவிருக்கின்றனர்! இவர்கள் எல்லாம் ஈழத்தமிழர்களின் வாழ்வை, வரலாற்றை, இன்றைய வாழ்க்கை முறையை நேரடியாக காணவிருக்கின்றனர்! தமிழின் தொன்மையை—தமிழ்கலைகளின் பழமையை—தமிழர்களின் பழம்பெரும் நாகரிகத்தை பற்றியெல்லாம் ஆராய்ச்சிக்கட்டுரைகளை இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கவிருக்கின்றனர்! ஆகவே பல்வேறு நாட்டு அறிஞர்களும் தமிழ் ஈழத்தில் தங்கியிருந்து மொழி ஆய்வு செய்கின்ற அந்த ஏழு நாட்களும், ஈழத்தமிழினத்துக்கு பேரெழுச்சியையூட்டும் நாட்களாக இருக்குமென்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை!

நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு பூரண ஆதரவும் வாழ்த்துக்களும் தெரிவித்து, தமிழ் நாட்டிலிருந்தும் டெல்லி, லண்டன், மலேசியா போன்ற பல்வேறு இடங்களிலிருந்தும் அறிஞர்களும், தமிழ் அன்பர்களும் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையின் புதிய தலைவருக்கு இப்போதே கடிதங்கள் எழுதத் தொடங்கியிருக்கிருர்கள் என்பதை அறியும் போது மாநாடு நிச்சயம் ஒரு வெற்றி மாநாடாக—ஈழத்தமிழினத்தின் வரலாற்றில் ஒரு மைல் கல்லாக அமையும் என்று எதிர்பார்க்கலாம்!

எனவே மாநாடு வெற்றி பெற்றிட, ஈழத்தமிழர்கள் அனைவரும் கட்சி பேதங்களைக் கடந்து — தங்கள் பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் மாநாட்டு நிர்வாகிகளுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிருேம்!

மாநாடு வெற்றிபெற, தமிழ் மக்களிடையேயுள்ள அறிஞர்கள், எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் அனைவரும் தங்கள் ஆலோசனைகளை, திட்டங்களை மாநாட்டு நிர்வாகிகளுக்கு சமர்ப்பிப்பதுடன், மாநாட்டு வெற்றிக்காக இப்போதிருந்தே செயல்படத் தொடங்கவேண்டும்.

தமிழ் பேசும் மொழி வழித்தொழிற்சங்கங்களும், பல்வேறு இலக்கிய மன்றங்களும் தங்கள் நல்லாதரவை மாநாட்டுக்கு ஏற்கெனவே தெரிவித்திருக்கிருர்கள்!

வெறும் ஆதரவும், அனுதாபமும் காட்டுவதால்மட்டும் மாநாடு வெற்றி பெற்றிடமுடியாது. தமிழ் மக்களிடையேயுள்ள வசதி படைத்தவர்கள், வள்ளல்கள், தனவந்தர்கள், மாநாட்டு நிதிக்கு தாமதமின்றி வாரி வழங்க முன்வரவேண்டும்! பாரதி கூறியது போல—நிதி குவிந்தவர் பொற்குவையும், நிதி குறைந்தவர் காசுகளும் அள்ளிக்கொடுத்து மாநாட்டை வெற்றிபெறச் செய்யவேண்டும்!

ஆட்சியாளரும் இந்த மாநாட்டுக்கு சகல உதவிகளையும் அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிருேம். ஏனெனில், இது அரசியல் மாநாடல்ல—அரசியலுக்கு அப்பாற்பட்ட மொழித்துறை மாநாடு—அனைத்துலக வேலிய மாநாடு!

அரசு உதவினுலென்ன—உதவாவிட்டாலென்ன, தமிழ் மக்கள் தங்கள் பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் அள்ளி வழங்கி, தமிழாராய்ச்சி மாநாட்டை நிறைவுள்ளதாக்கி, தமிழ்த்தாயின் திருவடிகளில் மற்ருேர் வெற்றிமாலையை சூட்டுவார்கள் என்று மெத்த நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்ருேம்!

# முதலமைச்சர் சிறிமாவுக்கு பண்டிதர் விடுக்கும் சவால்!

"எல்லோரும் உணவு உற்பத்தி இயக்கத்துக்கு ஒத்துழைக்க வேண்டுமென்று நீங்கள் மேடையிலும் வானெலியிலும் முழங்குகிறீர்கள். எனினும் உங்கள் அமைச்சர்கள் சிலர் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சிறிதும் மதியாமல் வேண்டுமென்றே புறக்கணித்து வருகிருர்கள்; உணவு உற்பத்தி இயக்கத்தையும் கட்சி அரசியல் சேற்றில் புதைத்து வளர்க்க முயல்கிருர்கள்."

என்று திரு. இரத்தினம் பா.உ. பிரதம அமைச்சர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அக்கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுவதாவது:—

இதனுல், குறிப்பாகத் தமிழ்ப்பகுதிகளில் எவ்வாறு உணவு உற்பத்தி இயக்கம் பாதிக்கப்படுகின்றது? விவசாயிகள் எவ்வளவு இடர்ப்படுகின்றனர்? அவர்களுக்கு விதைநெல் பசளை முதலியவற்றையும் விவசாயக்கடனையும் கொடுக்கவேண்டிய ப. நோ. கூ. சங்கங்கள் வயிறு வளர்ப்பதற்குச் சிறிலங்கா சுதந்திரக்கட்சிப்போர்வைக்குள் நுழைந்திருப்பவர்களின் நிருவாகத்தில் சிக்கி மக்களுக்கு எவ்வளவு வேதனையையும் வெறுப்பையும் உண்டாக்குகின்றன என்பவற்றைச் சிறிதும் இந்த அமைச்சர்கள் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை.

சுரண்டல்களையும் ஊழல்களையும் ஒழிப்போம் என்று நீங்கள் பாரறியக் கூறுகிறீர்கள். ஆனுல் உங்கள் அமைச்சர்கள் சிலர் இங்கு தரகர் கூட்டத்தைப் பெருக்குகிருர்கள். புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கத்தில் நடைபெற்ற ஊழல் குறித்து விசாரணை நடத்தியும் ஊழலில் ஈடுபட்டோருக்குரிய தண்டனை விதிக்கப்படவில்லை; தேசிய அரசுப் பேரவையில் நான் கேட்பதற்கு அறிவித்தல் கொடுத்துள்ள வினுக்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன. இவை ஊழலுக்கு எவ்வாறு ஊக்கமளிக்கப்படுகிறது என்பதை நன்கு காட்டும்.

இச்சங்கத்தின் தலைவர், ஊர்காவற்றுறைத் தொகுதி சிறீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு. ப. கதிரவேலு. இதற்கு மட்டுமா? ஊர்காவற்றுறைக் கடற்ருெழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கும் அவரே தலைவர். இவரைப் பற்றிய முறைப்பாடு கைலஞ்ச ஆணையாளருக்கும் அனுப்பப்பட்டது. இவர் தலைவராக இருந்து நடாத்தும் புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கத்தின் ஊழல் குறித்து அச்சங்கத்தின் தெரிவு செய்யப்பட்ட இயக்குனர் திரு. க. முத்துத்தம்பி எனக்கு அனுப்பிய முறையீட்டை இதனுடன் வேண்டிய நடவடிக்கைகாகஇணைத்துள்ளேன்.

வேலணை ப. நோ. கூ. சங்கமும் முறையாக இயங்கவில்லை. இயக்குனர் குழுவினரும் பொது முகாமையாளரும் இச் சங்கத்தை நடத்த முடியாமல் சீர் குலைத்து மக்களின் எதிர்ப்புக்கும், வெறுப்புக்கும், பழிப்புக்கும் ஆளாகியுளர். இச்சங்கம் போதிய விதை நெல்லை உரிய காலத்தில் பெற்றுக்கொடுக்காமையால் விவசாயிகள் நாடோறும் முறையிடுகின்றனர். சீனி, மண்ணெண்ணை, ஆடை முதலிய பொருள்களையும் முறையாக மக்களுக்குக் கொடுப்பதில்லை. போலிப் பங்கீட்டுப் புடவைப் புள்ளிகளை 'சலுசலாவுக்கு' கொடுத்து மாட்டிக் கொண்டதால் பங்கீட்டு ஆடைகளை இச்சங்கம்பெறமுடியவில்லை.

நான் இன்று உங்களுக்கு அனுப்பிய அவசரத் தந்தியில் குறிப்பிட்டவாறு எனது தொகுதியிலுள்ள புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கமும், வேலணை ப. நோ. கூ. சங்கமும், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கமும் மிளகாய் வெங்காயம் பயிரிடக் கொடுக்க வேண்டிய விவசாயக் கடனை இன்னும் கொடுக்காமையால் விவசாயிகள் பேரிடர்ப்படுகின்றனர். வேலணை ப. நோ. கூ. சங்கம் இன்னும் போதிய விதை நெல்லைப் பெற்றுக் கொடுக்கவில்லை. விதைநெல் பெறுதற்கு அரசாங்க அதிபர் செய்த உதவியையும் இச்சங்கம் முறையாகப் பயன்படுத்தவில்லை.

இம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் அவர்களின் முறையீட்டை நான் உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருதலைத் தவிர வேறெதுவும் செய்ய முடியாது. உங்கள் சொந்த நேர்மையிலும் உறுதியிலும் நம்பிக்கை இருப்பதால் இதனை உங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன். உங்கள் அமைச்சுக்களிலுள்ள திறமையும் உறுதியுமுள்ள ஓர் உத்தியோகத்தரை இங்கு அனுப்பி இச்சங்கங்கள் தொழிற்படும் முறைகள் குறித்து ஒரு பகிரங்க விசாரணை நடத்தினுல் மக்களின் முறைபீடுகளையும் அவர்களின் உள்ளக் கொதிப்பையும் நீங்கள் நன்கு அறியமுடியும். நீதி நியாயத்துக்காகவும் ஊழலை ஒழிக்கும் உங்கள் உறுதியை நிலை நாட்டவும் இவ்வாறு ஒரு பகிரங்க விசாரணையை நடத்த உடன் படுவீர்களா? அன்றேல் உங்கள் கொள்கையும் வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சரின் கொள்கைதானு என்பதை அறிய விரும்புகிறேன்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

# இலங்கை தமிழர்கள்....

கம் செலுத்தும் இலங்கை அரசு, இந்த தோட்டத் தமிழ் மக்களின் சம்பளத்தையும் வாழ்க்கை நிலையையும் உயர்த்தும்படி நெருக்குதல் ஏதும் கொண்டுவராததன் காரணத்தை அறிந்து கொள்ளமுடிகிறது" என்று ஒப்சேவர் கட்டுரையில் குறிப்பிட்டுள்ள பகுதி உண்மையல்லவென்றும், பௌத்தத்தையும், இந்து சமயத்தையும்விட நெருங்கிய பிணைப்பும் உறவும் உள்ள வேறு சமயங்கள் கிடையாதென்றும் மேலும் திரு. நாணயக்காரா எழுதியிருந்தார்.

திரு. நாணயக்காராவின் கடிதத்தைப் பிரசுரித்த 'இலண்டன் ஒப்சேவர்' அதன் அடியில் ஆசிரியர் குறிப்பாக பின்வருமாறு எழுதியுள்ளதுடன், திரு. நாணயக்காராவின் கடிதத்துக்கு மத்தியில் தமிழ்த் தொழிலாளர்களின் படமொன்றைப் பிரசுரித்து "DO THESE TAMILS IN CEYLON BELONG TO AN UNWANTED GROUP?" (இலங்கையில் வாழும் இந்தத் தமிழர்கள் தேவையற்ற குழுவைச் சேர்ந்தவர்களா?) என்று படவிளக்கமும் எழுதியுள்ளது.

Our articles were concerned chiefly with the appalling conditions under which Ceylon tea pickers (Most of whom are still Indian Tamils) live and work. They did not seek specifically to allot blame, though readers may have difficulty in seeing how the Ceylon Government can disown its share [illegible] Mr. Nanayakara says that the Government has laid down rules for the wellbeing of these labourers and their families; our articles showed that it does little to enforce them.

It is true that Buddism and Hinduism have an affinity. So have the two forms of Christianity in Ireland. But Mr. Nanayakara Surely will not deny that the prolonged hostility between Sinhalese Buddhists and Tamil Hindus has often led to Blood Shed, even in recent times. Not long ago, The Tamils asked the Queen, as head of the Commonwealth, to intervene on their behalf as 'an unwanted group whose normal human rights are denied" by the Sinhalese Majority."

இதன் தமிழாக்கம் வருமாறு:-

"இலங்கைத் தேயிலைத் தோட்டங்களில் தேயிலைக் கொழுந்து கிள்ளுகிறவர்களின் (பெரும்பான்மையோர் இப்போதும் இந்தியத் தமிழர்களே) பரிதாபமான வாழ்வையும் துன்பமான நிலைமைகளையும் முக்கியமாக எடுத்துக்காட்டுவதாகவே எமது கட்டுரையமைந்திருந்தது. அதைப் படிக்கும் வாசகர்களுக்கு இப்பிரச்சினையில் இலங்கை அரசு எப்படிதனது பொறுப்பைத் தட்டிக்கழிக்கமுடியும் என்பதைக் கண்டறிவதில் சிரமம் இருந்தாலும் அக்கட்டுரைகள் இலங்கை அரசு மீது குறிப்பிட்டுக் குற்றம் [illegible]வில்லை.

"இந்தத் தொழிலாளர்களினதும், அவர்களின்குடும்பங்களினதும் நல்வாழ்வுக்காக இலங்கை அரசு, திரு. நாணயக்காரா கூறுவது போல சட்டங்களை உண்டாக்கியிருக்கலாம்; எங்கள் கட்டுரை குறிப்பிட்டுக்காட்டியதென்னவென்ருல், அவற்றை நடைமுறைப் படுத்த அரசு செய்தது அற்பம் என்பதே!

"பௌத்தத்துக்கும், இந்து சமயத்துக்கும் உறவு உண்டென்பது உண்மைதான். அதே போல அயர்லாந்திலுள்ள கிறிஸ்தவ சமயத்தின் இரு பிரிவுக்குமிடையேகூட உறவு இருக்கிறது.

"ஆனுல்—பௌத்த சிங்களவர்களுக்கும், தமிழ் இந்துக்களுக்குமிடையே இருந்துவரும் நல்லெண்ணம் மிக அண்மைக்காலத்தில்கூட—இரத்தக்களரிகள் ஏற்பட வழிவகுத்திருக்கின்றது என்பதை நிச்சயமாக திரு. நாணயக்காரா மறுக்கமாட்டாரென நம்புகிருேம்.

"சிங்களப் பெரும்பான்மையினரால், "சாதாரண மனித உரிமைகளும் மறுக்கப்பட்டு தேவையற்ற குழுவினராக ஒதுக்கப்படும்" தங்கள் சார்பாக, காமன்வெல்த் நாடுகளின் தலைவியென்ற முறையில் தலையிடுமாறு இலங்கைத் தமிழர்கள் மகாராணியாரிடம் முறையிட்டிருந்தது அதிக காலத்துக்கு முன்பல்ல!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மேடை

அன்பு நண்பா

"I ask the Hon. Prime Minister, are we all reactionaries merely because we oppose a cut in the rice ration and because we oppose a reactionary budget? who is Mrs. Srima Bandaranayake to call us reactionaries? After all she is a politician only by reason of the fact that she was the wife of Mr. S. W. R. D. Bandaranayake apart from that has she had any past with regard to politics?"

'பங்கீட்டு அரிசியை வெட்டுவதையும், பிற்போக்குத்தனமான ஒரு வரவு செலவுத்திட்டத்தையும் எதிர்ப்பதொன்றுக்காக நாமெல்லாம் பிற்போக்கு வாதிகளா என்று பிரதமரைக்கேட்க விரும்புகிறேன். எங்களைப் பிற்போக்குவாதிகள் என்று கூறுவதற்கு இந்த சிறிமாவோ பண்டாரநாயகா யார்? ஆக, திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகாவின் மனைவியாக இருந்தவர் என்ற ஒரே காரணத்தினாலேயே அரசியல் வாதியானவர்: இதைவிட அரசியலில் அவருக்குப் பழைய வரலாறு ஏதேனும் உண்டா?'

—இவ்வளவு கடுமையான வார்த்தைகளால் பிரதமரைச் சாடியிருப்பது யாரென்கிருய்? நிச்சயம் நம்மவர் யாருமல்ல—இன்றைக்கு திருமதி. சிறிமா பண்டாரநாயகாவைத் தமது தலைவராக ஏற்று அவரது தலைமையின் கீழ் நிதியமைச்சர் பதவியை வகித்து வரும் டாக்டர் என். எம். பெரேரா அவர்களே இவ்வாறு கூறியிருப்பவர். ஆம், 1962ம் ஆண்டு ஆகஸ்ட் 23ம் திகதி பாராளுமன்றத்திலே பகிரங்கமாக அன்னுர் நிகழ்த்திய உரையின் போதே மேற்கண்டவாறு கூறியிருக்கிருர். அவரது இந்த உரை பாராளுமன்ற அதிகார அறிக்கை தொகுதி 46ல் 3180வது பந்தியில் இடம்பெற்றிருக்கிறது.

நண்பா, இரண்டுகொத்து அரிசி தருவதாக வாக்குறுதியளித்து ஆட்சிபீடமேறியவர்கள்—இன்றைக்கு கிடைத்து வந்த பங்கீட்டு அரிசியையே அரைக்கொத்தாக வெட்டியும், ஏனைய உணவுப்பொருட்களின் விலையைக் கூட்டியும், கட்டுப்படுத்தியும், இந்நாட்டு ஏழைகளை—நடுத்தரவர்க்கத்தினரை—பாட்டாளித் தோழர்களை — அன்றுடம் காய்ச்சிகளைப்பட்டினிபோட்டு கொல்லுகின்ற அநியாயத்தை எதிர்த்து குரலெழுப்புபவர்களுக்கு ஆளுங்கட்சியினர் சூட்டி வருகின்ற பட்டம் என்ன தெரியுமா? பிற்போக்குவாதிகள்!

அன்றைக்கு—1962ம் ஆண்டு—அரிசிவெட்டையும் ஏனைய அநியாயங்களையும் எதிர்ப்பதனுல் மட்டும் ஒருவன் எப்படிப் பிற்போக்கு வாதியாக முடியும் என்று சீறியெழுந்தவர்கள் தாம், இன்றைக்கு அரிசியை அரைக்கொத்தாக்கியதையும் ஏனைய உணவுப் பொருட்களுக்கு விலையைக்கூட்டியும் கட்டுப்பாடு விதித்தும் மக்களை வாட்டி வருத்துவதையும் எதிர்த்துக் குரல் கொடுக்கும் நம்மைப்பார்த்து பிற்போக்குவாதிகள் என்று நாக்கூசாமல் கூறுகின்றனர் என்ருல் கருத்துக்களை எப்படியெல்லாம் தங்களுக்கு ஏற்றபடி காலத்துக்குக் காலம் மாற்றிக்கொள்ளுகிருர்கள் என்பதைப் பாரேன்!

டாக்டர் என். எம். பெரேரா இப்படியென்ருல் — 'நேர்மையான' கம்யூனிஸ்ட் என்று இப்போது தம்மைக் கூறிக்கொள்ளும் பீட்டர் கெனமன், என்ன சொல்கிருர் கேள்!

"As far as communist Party is concerned, we have opposed every attempt to tamper with the rice ration. we opposed it, when it was done by the Prime Minister earlier, we are opposing it when he is doing it now, and we were opposed to the attempts of the S L. F. P. government when it made such a proposal."

"கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரை — அரிசிப்பங்கீட்டில் கை வைக்கும் ஒவ்வொரு முயற்சியையும் எதிர்த்து வந்திருக்கிருேம். பிரதமரால் முன்பு இத்தகைய நடவடிக்கையெடுக்கப்பட்ட போதும் எதிர்த்தோம். இப்போது அவர் அதைச் செய்கிறபோதும் எதிர்க்கிருேம். சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசு இருந்த காலத்தில் அது அத்தகைய திட்டத்தை கொண்டு வந்தபோதும் எதிர்த்தோம்—"

—இப்படி திரு. பீட்டர் கெனமன் கூறியது எந்தச் சந்தர்ப்பத்தில் என்கிருய்? 1966ம் ஆண்டு, தேசிய அரசாங்கம் இலவசமாக ஒரு கொத்து அரிசியையும், ஒரு ரூபாவுக்கு இரண்டாவது கொத்து அரிசியையும் வழங்கத் தீர்மானித்தபோதே இவ்வாறு அடித்து முழக்கினுர் தோழர் கெனமன்! (பாராளுமன்ற அதிகார அறிக்கை 28-12-1966தொகுதி 70—பந்தி 4038ல் இதைக் காணலாம்!)

ஒரு கொத்து அரிசியை இலவசமாக வழங்கிவிட்டு — இரண்டாவது கொத்து அரிசியை ஒரு ரூபாவுக்கு கொடுத்ததை எதிர்த்து இவ்வாறு முழக்கமிட்டவர்கள்தான் — இன்று ஆட்சிக் கதிரையில் அமர்ந்து கொண்டு, இலவச அரிசியையும் அரைக்கொத்தாக்கி, இரண்டாவது கொத்து அரிசியையும் அறவே இல்லாமற்செய்து மக்கள் வயிற்றில் அடிக்கிருர்கள்!

நண்பா—நான் இப்படிக் கூறுவது, யூ. என். பி. க்கு மீண்டுசாத்துவதற்கல்ல — இன்று ஆட்சியிலிருப்பவர்களின் சந்தர்ப்பவாதத்தையும் நேர்மையற்ற அரசியலையும் எடுத்து விளக்குவதற்குத்தான்!

நம்முடைய சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் நவம் அண்ணன் மேற்கண்ட இந்த இருவரது பேச்சுக்களையும் தேசியபேரவையில் படித்துக் காட்டி — சாட்டையடி கொடுத்த போது — அவர்களால் அதற்குப்பதில் ஏதும் கூறமுடியவில்லை! எப்படிக் கூறிடுவது? அன்று பேசியதெல்லாம்தான் எழுத்திலே ஆதாரத்துடன் இருக்கின்றனவே!!

'பாண் கிடைக்காததால் தோட்டத் தொழிலாளி தற்கொலை!'

'பசியால் பச்சிளம் சிசுக்கள் மரணம்!'

'எச்சில் இலைக்காக நாயுடன் போட்டியிடுகிருர்கள் மனிதர்கள்'

'பாணுக்காக தோட்டத்தில் அடிதடி'

—என்றெல்லாம் நாளேடுகளில் வருகின்ற செய்திகளைப் படித்திடும்போது நம் நெஞ்சமெலாம் வேதனையால் வெய்துயிர்க்கின்றன; இச் செய்திகள் தவருனவை என்று அரசு தரப்பினர் ஒருவேளை மறுக்கக்கூடும்; ஆனுலும், நாட்டு மக்கள் உணவு கிடைக்காததால் படுகின்ற அல்லோல கல்லோலம்—அவலம்—துன்பம்—சொல்லுந் தரமன்று; இதை யாராலும் மறுக்கமுடியாது!

**பிரிந்தால் வாழுவோம்! வாழவும் வைப்போம்!**

எச்சில் இலைக்காக நாயுடன் மனிதன் போட்டியிடும் நிலை ஒரு காலத்தில் தமிழ் நாட்டில் இருந்ததென்று கூறக்கேட்டிருக்கிறேன். ஆனுல் இன்றைக்கு அந்தத் தமிழ்நாடு உணவுப் பொருட்களை இந்திய துணைக்கண்டத்திலுள்ள ஏனைய மாநிலங்களுக்கு அனுப்புகின்ற அளவுக்கு அத்துறையில் வளர்ச்சி கண்டிருப்பதையிட்டு உள்ளம் பூரிக்கின்ற அதே நேரத்தில், இந்நாட்டின் நிலை தாழ்ந்து கொண்டிருப்பதையிட்டு யாரும் வேதனைப்படாமலிருந்திட முடியாது!

இந்த நேரத்திலும் கூட— இனபேதமின்றி — உணவுற்பத்தியில் அனைவரையும் ஈடுபடுத்திடவேண்டிய அரசு, இனபேதம் காட்டி வருவதை யாரும் மறுத்திடமுடியாது! காடு வெட்டி களனியாக்கி, நிலம் தொட்டு வளம் பெருக்க மலையகத்தில் பல்லாயிரம் தமிழ்த்தொழிலாளர்கள் தயாராக இருக்கிருர்கள்! அவர்கள் விவசாயம் செய்திடுவதற்கு ஏற்ற ஏராளமான நிலம், தமிழ் ஈழத்தில்—அதாவது வடக்கு, கிழக்கு மாகாணங்களில்—விரிந்து பரந்து கிடக்கிறது; ஆனுல் இந்த நிலங்களில், உண்மையான உழைப்பாளிகளான மலையகத் தமிழர் குடியேறி உணவுற்பத்தியிலீடுபடுவதற்கு தடையாக இருப்பது அரசாங்கத்தின் சட்டங்களே! இப்படி சட்டங்களைப்போட்டு, மலையகத் தமிழ் மக்களை வடக்கு, கிழக்கில் குடியேறி விவசாயம் செய்யவிடாமல் தடுத்துவைப்பது குறுகிய இனவாதம் அன்றி வேறென்ன?

செட்டிகுளத்தில், கடந்த 14 வருடங்களாக நெல் உற்பத்தியிலீடுபட்டிருந்து வந்த 42 உழைப்பாளிக் குடும்பங்களுக்கு அங்கிருந்து திடுதிப்பென்று வெளியேறும்படி உத்தரவிடப்பட்டதென்ருல்—அதற்கு ஒரே காரணம் அவர்கள் தமிழர்கள் என்பதன்றி வேறு என்னவாக இருக்கமுடியும்? 'சமதர்மம்' பேசுகின்ற டாக்டர் கொல்வின் ஆர் டீ. சில்வா, கொஞ்சம் கூட நாக்கூசாது அந்தத் தமிழ்க் குடும்பங்களுக்கு 'கள்ளத்தோணி' என்ற பட்டம் சூட்டியிருக்கிருர்! இவர்களது கடைந்தெடுத்த சமதர்மம் எப்படிப்பட்டதென்பதைத்தான் நாடு இன்று உணர்ந்துவிட்டதே!

இதே போலவேதான் கல்குடாத்தொகுதியிலும், கடந்த நான்கு ஐந்து ஆண்டுகளாக விவசாயம் செய்துவந்த 42 தமிழ்க் குடும்பங்களை அங்கிருந்து உடனடியாக வெளியேறும்படி உத்தரவு போயிருக்கிறது! அதே வேளையில், அங்கிருந்த சிங்களக்குடும்பமொன்றுக்கு மட்டும் அவர்கள் விவசாயம் செய்து வந்த காணியை கையளிப்பதற்கு அரசாங்க அதிபர் முன்வந்திருக்கிருர்!!

இப்போது, கல்குடாத் தொகுதியிலுள்ள வடமுனைக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் சட்டபூர்வமாக குடியேறி விவசாயத்திலீடுபட்டிருக்கும் 20 தமிழ்க் குடும்பங்களை அங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றிட புனைப் பகுதியில் சட்டவிரோதமாக குடியேறிய சிங்களவர்கள் பௌத்தபிக்கு ஒருவர் தலைமையில் தொல்லைகள் பல செய்துவருகின்றனர் என்பதை கல்குடா பா. உ. திரு. தேவநாயகம் பிரதமருக்கு சுட்டிக் காட்டியுள்ளார்!

தமிழ் மக்களுக்கு எதிராக — அதுவும் உணவுற்பத்தியில் ஈடுபடுகின்ற தமிழ் மக்களுக்கு எதிராக இத்தனை கொடுமைகள் நடைபெற்றும், அவற்றை ஆட்சியாளருக்கு எடுத்துக் காட்டியும், இந்த அநீதிகள் துடைக்கப்பட எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை! உணவுற்பத்தித் துறையில் தமிழ் மக்களிடம் ஒத்துழைப்பு கோருபவர்களே அப்படி ஒத்துழைக்கும் தமிழ் மக்களுக்கு தொல்லைகள் விளைவிக்கும்போது — அவர்கள் நாடுகின்ற ஒத்துழைப்பு வெறும் வெற்றுரவாரமே தவிர அந்தரங்க சுத்தி நிறைந்ததல்ல — என்பது நமக்குப்புரிகிறது!

நண்பா, எவ்வளவு பாரதூரமான பாரபட்சம் இது! அதுவும் உணவுற்பத்திப் போரைப் பிரதமர் பிரகடனப்படுத்தியப் பிறகு!! தமிழன் உணவுற்பத்திக்கு ஒத்துழைப்புத்தர முன்வந்தாலும், அரசு தமிழினத்தை எவ்வளவு பாரபட்சம் காட்டி ஒதுக்க முனைகிறது பார்த்தாயா? இந்த நிலையில் தமிழ் மக்களிடம் ஒத்துழைக்கும்படி கோருவது வெறும் கண்துடைப்பு அன்றி வேறென்ன?

இன்றைய உணவு நெருக்கடி ஒன்றை மட்டும் உணர்த்துகிறது! தமிழ்ஈழத்தில் தங்கம் விளையும் நிலம் உண்டு; தமிழ் மக்களிடமோ அயராத உழைப்பு சக்தியுண்டு! தமிழ் ஈழம் தனிநாடானுல்—தங்க ஈழம், தமிழர் ஆட்சியின் கீழ் வந்து விட்டால், அது உணவில் தன்னிறைவு காண்பது மட்டுமல்ல—நிச்சயம் சிங்கள நாட்டுக்கும் உணவுப் பொருட்களை அனுப்பிவைத்து சிங்கள மக்களின் பசிப் பிணியையும் தீர்க்க முடியும் என்ற உறுதியான நம்பிக்கை என்நெஞ்சில் ஒளிவிடுகிறது! தமிழ் நாட்டுக்கு முற்காலத்தில் நம்முடைய தமிழ் ஈழத்திலிருந்து உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு கப்பல்கள் சென்ற காட்சியை சிலப்பதிகாரம் பேசுகிறதே!

அதுமட்டுமல்ல—இன்றைக்கு ஒரே நாடாக — ஒரே ஆட்சியமைப்பின் கீழ் இருப்பதால்தான், — சிங்கள நாட்டுடன் சேர்ந்து வாழ்வதால்தான் — சிங்கள ஆட்சியாளர்களின் தவருன பொருளாதாரக் கொள்கைகளால் ஏற்படும் பொருளாதார விபத்துக்களுக்குள் தமிழ் ஈழ மக்களும் சிக்கித் துன்பப்படநேருகிறது. தமிழ் ஈழம் தனியரசானுல்—இத்தகைய பொருளாதார நெருக்கடிக்குள் தமிழ் மக்கள் சிக்கவேண்டிய அவசியமில்லாமல் போவது மட்டுமல்ல; சிங்கள மக்களின் பசிப்பிணியைத் தீர்த்திடவும் கைகொடுத்து நம்மால் உதவ முடியும்!!

உன் அன்புத்தோழன்,

கோவை-மகேசன்

இதோ மற்றுமோர் சீர்திருத்தப் பெற்ற உன்னத தயாரிப்பு

**நியூ மில்க்வைற் சோப்**

எங்கும் விற்பனையாகிறது.

மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம்,

த. பெ. எண். 77,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்குளத்தை சிங்களமயமாக்க திட்டமிட்டு நடைபெறும் பகீரதப் பிரயத்தனம்!

## தமிழ் குடியேற்ற வாசிகள் அங்குபடும் சொல்லொணாத் துன்பம்!

அரசாங்கத்தினால் முதலிக்குளம் தமிழருக்கும், பதவியா சிங்களவருக்குமாக ஆரம்பத்தில் திட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் அரசாங்கம் சிங்களவரையே முதலிக்குளத்தில் குடியேற்ற முயற்சித்தது அது அமரர் இராசவரோதயம் அவர்களால் முறியடிக்கப்பட்டு அவரின் முயற்சியால் அங்கே தமிழர்கள் குடியேறினார்கள்.

பின் குடியேறிய மக்களின் பிள்ளைகள், அதற்கு மேலே உள்ள காணிகளில் குடியேறினர். அந்த தமிழ் இளைஞர்களை கைது செய்துவிட்டு, அந்த இடங்களில் வெளியில் இருந்த சிங்களவர்களை அரசாங்கம் அரசவாகனங்களில் ஏற்றிக்கொண்டு வந்து குடியேற்றியது.

அதன்பின், விடுதலையாகிய தமிழ் இளைஞர்களை, மீண்டும் தங்கள் பூமி பறிபோவதை எதிர்த்து வாதாடினார்கள். அவர்களின் எதிர்ப்பை தாங்க முடியாமல் சமாதானப் பேச்சு வார்த்தை நடத்தி, தமிழருக்குள் சண்டை வந்தால் அதை தீர்ப்பதற்கு ஒரு தமிழரையும், சிங்களவருக்குள் சண்டை வந்தால் அதை தீர்ப்பதற்கு ஒரு சிங்களவரையும் அரசு நியமித்தது. இது வெளிப்பூச்சுக்கு நடந்தது.

அரசாங்கம் தனது இனவெறித்திட்டத்தை இரகசியமாக இரவோடு இரவாக அமுல் படுத்தி சிங்களவர்களை குடியேற்றியது. 'பன்குளம்' என்னும் பெயரை மாற்றி "மொறவெவ" என்னும் பெயரை கொண்டு வந்தது.

அதன்பின் இராசவரோதயம் அவர்களால் வழங்கப்பட்ட காணிகளில் அரசாங்கம் கைவைக்க தொடங்கியது; தமிழர் தம் காணிகளில் வேலை செய்யப்போனால், அங்கே சிங்களவர்கள் தமிழர்களின் காணிகளில் வேலை செய்வார்கள், ஏன் என்று கேட்டால் இது காணியதிகாரியால் எங்களுக்கு வழங்கப்பட்டது என்பார்கள் உடனே திருகோணமலைக்கு சென்று காணியதிகாரியிடம் கேட்டால், நாளைவா என்பார்கள் நாளை போனால் மறுநாள்வா, இப்படி ஏமாற்றுகிறார்கள் அநியாயமாக பஸ்களுக்கு வீண்காசு கொடுத்து ஓடித்திரிகிறார்கள்.

அதன் பின் கோமரங்கடவாச் சந்தி (பன்குளத்தில் இருந்து வட திசை அரை கட்டை தூரம்) என்ற இடத்தில் உப உணவு உற்பத்தி என்னும் போர்வையில் சிங்களவர்களைக் குடியேற்றியது; இதில் ஒரு தமிழருக்கும் காணி கிடைக்கவில்லை.

இதை ஆட்சேபித்து தமிழ் இளைஞர்கள் அரசாங்கத்தை கண்டித்தார்கள். பின்மேற்கு திசையில் குடியேற்ற திட்டத்தை உருவாக்கியது. அதை சிங்களவர்களுக்கு கொடுக்க அரசு முயற்சித்த போது இதை எதிர்த்து திருமலை தேசியப் பேரவை உறுப்பினர் திரு பா. நேமிநாதனும் இளைஞர்களுமாக குரல் கொடுத்தனர் இதை அடுத்து தமிழருக்குக் காணி கிடைத்தது.

தெற்கு பகுதியில் உணவு உற்பத்தி என்னும் போர்வையில் ஆகாயப்படையினரை குடியேற்றினார். கிழக்கில் 'நல்ல குட்டியாறு' என்னும் இடத்தில், சிங்களவர் குடியேற்றப்பட்டனர்— இப்படி நாலு கரையாலும் சிங்களவர் சூழ்ந்து பன்குளத்தை சிங்கள நாடாக்க முயற்சி நடக்கிறது. ஏன் என்றால் திருமலை பகுதியில் மாரியும் கோடையும் விவசாயம் செய்கிற இடம் பன்குளம் அதை தம்முடைய மக்களுக்கு கொடுப்பதற்கு முனைகிறது ஆட்சி.

அரசாங்கம் உப உணவு உற்பத்திக்காக விமானப் படையினரை குடியேற்றியது, அதுவும் தமிழர் நூற்றுக்கு நூறு வீதம் வசிக்கும் இடத்தில், இது பன்குளத்துக்கு தெற்கு பகுதியாகும். ஆகாயப்படையினர் குடியேறியது முதலில் அந்த கிராம மக்கள் இறந்தால் அடக்கம் செய்யும் சுடலையை கைப்பற்றினர். பின் பொதுமக்கள் திருத்திய காணிகளைப் பிடித்தனர்.

### ஆகாயப்படையினரும் தமிழரும்

அந்த கிராமத்தில் தமிழர் ஒருவர் காலமானார் அவரின் பூதவுடலை தகனம் செய்வதற்கு சுடலைக்கு கொண்டு சென்றபோது துப்பாக்கி முனையைக் காட்டி பிரேதத்தை திருப்பி அனுப்பி விட்டார்கள். பின் அவரின் பூதவுடல் வடக்கு பகுதியில் உள்ள சுடலையில் தகனம் செய்யப்பட்டது.

அன்றொரு நாள் ஒரு இனவெறியன் சொன்னான் காணியமைச்சர் தமிழருக்கு 50 ஏக்கர் நிலம் கொடுத்துள்ளார்—நான் என்றால் தமிழனை அடக்கம் செய்யக்கூட ஒரு அடி நிலம் கூட கொடுக்க மாட்டேன் என்று சொன்னான். அதை அவர்களுடைய சாகாக்கள் நிறைவேற்றி விட்டார்கள்.

ஒரு பகுதி விவசாயம் செய்ய மறுபகுதி அழிந்து போகிறது இதுதான் விவசாய முன்னேற்றமா? இது விவசாய முன்னேற்றம் இல்லை— இது நாடு பிடிக்கும் நோக்கம்! தெற்கு பகுதி, அனேகமாக இப்போது மாரி காலம் உழவுயந்திரத்தினால் வேலைசெய்யமுடியாது. கால் நடைகள்தான் தேவை, ஆனால் கால் நடைகளை விவசாயிகள் ஆகாயப்படையினருக்கு பயந்து விற்று விட்டார்கள். ஆகையால் அங்கே விவசாயம் பாதிக்கப்படுகிறது.

மேலே கிழக்கு பகுதி விவசாயிகளிடம் கால் நடை கேட்டால் அவர்கள் தர மாட்டார்கள். ஏன் என்றால் அங்கே ஆகாயப் படையினர் சுட்டு வீழ்த்துவார்கள் என்று அஞ்சுகிறார்கள். ஆனால் அண்மையில் சிறி

பன்குளம்

**கணேசலிங்கம்**

மாவோ பண்டாரநாயக்கா சொன்னார், கால்நடைகளை உபயோகிக்காவிட்டால் அரசு பொறுப்பெடுக்கும் என்று. இங்கு நடப்பதோ அவர்களுடைய ஆட்களால் கால்நடைகளை வளர்க்கமுடியாமல் இருக்கிறது. இது

## ஆகாயப்படையினரின் அக்கிரமம்!

## தமிழனின் சுடலை நிலமும் ஆக்கிரமிப்பு!

தானா சோசலிசம்? இது தானா உணவு உற்பத்தி என்று ஆட்சியாளரை கேட்கிறோம்.

எத்தனையோ இளைஞர்கள் வேலையில்லாமல் திரிய இவர்களை ஏன் தமிழ்ப் பகுதியில் குடியேற்ற வேண்டும்? ஆகாயப் படையினரை குடியேற்றியதை நாம் ஆட்சேபிக்கவில்லை. சும்மா சாப்பிட்டு விட்டு கிடக்கும் இவர்கள் விவசாயத்தில் ஈடுபடுவது மிகவும் நல்லது; ஆனால் மிருகவெறி பிடித்தவர்களை மனிதருக்கு இடையில் விட்டால் எப்படி இருக்கும். ஏன் உங்கள் சிங்கள பகுதிகளில் குடியேற்றி இருக்கலாமே இல்லாவிட்டால் அவர்களுக்குகென தனி இடம் கொடுத்து அவர்களை ஒதுக்கி விடலாம்!

அரசு உணவு உற்பத்தி செய்வதானால் முதலில் ஆகாயப்படையினரை வெளியேற்ற வேண்டும் அந்த இடத்தில் தமிழ் இளைஞர்களை குடியேற்றவேண்டும். இளைஞர்கள் கிடைக்காவிட்டால் சொல்லுங்கள், நாம் திரட்டித் தருகிறோம்!

அதன் அருகே குடியேறிய தமிழ் மக்களை ஆயுதம் தாங்கிய ஆகாயப் படையினர் வந்து வீட்டை விட்டு எழும்புமாறு விரட்டுகின்றனர் அதுவும் 8 வருசத்துக்கு முன்னர் குடியேறிய மக்களை!

ஆகாயப்படையினர் குடியேறிய பிறகு, சிங்கள மக்களுக்கு ஒருவித கரைச்சலும் இல்லை இது குறித்து குடியேற்ற திட்ட அதிகாரியிடம் கேட்டால் அதுபற்றி எனக்கு தெரியாது என்கிறார்.

பிறகு காணியதிகாரியின் மாதாந்தகூட்டம் நடந்தது. அதில் இதைப் பற்றி கேட்டவுடனே அது அவர்களுக்கு கொடுத்தாச்சு நீங்கள் உடனடியாக எழும்பவேண்டும்; இல்லாவிட்டால் அவர்கள் வந்து உங்கள் பெண்களை இழுத்தாலும் நாங்கள் ஒன்றும் செய்யமுடியாது என்றார்கள். அப்படியானால் இவர்கள் மிருக வெறியர்கள் என்பதை அரசாங்கம் மறைமுகமாக ஒப்புகொள்கிறதா.

தமிழ் மக்களை பன்குளத்தைவிட்டு ஓடவைப்பதற்கு இதுதான் தக்கவழி என அரசு நினைக்கிறது! ஆனால் அரசாங்கத்துக்கு ஒன்றுகூற விரும்புகிறேன் — நீங்கள் உணவு உற்பத்தி துறையில் இப்படி பாரபட்சம் காட்டினால் மக்களின் விருப்பு வெறுப்புக்குத்தான் ஆளாவீர்கள்!

இந்த விசயம் குறித்து பனிக்கட்டி முறிப்பு கிராம சபைத் தலைவர் காளிக்குட்டி. அவர்கள் அரசாங்க அதிபருக்கும் நேமிநாதனுக்கும் அவசரத் தந்தி அனுப்பியுள்ளார். பயிர் செய்கை குழுவும் மக்களின் கையொப்பங்களுடன் அரசாங்க அதிபருக்கும் நேமிநாதனுக்கும் மகஜர் அனுப்பியுள்ளது.

இது தொடர்பாக நேமிநாதன் சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு அவசரத் தந்தி அனுப்பி இருந்தார். பின் பாதுகாப்பு வெளிவிவகார பிரதி அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி அவர்களை சந்தித்தபோது அங்கே தோட்ட தொழிலாளி குடியேறுவதாயும் அதுதான் அங்கே ஆகாயப்படையினரை குடியேற்றியுள்ளதாகவும் கூறினாராம்.

நாம் அரசை கேட்கிறோம் தோட்டத்தொழிலாளி தானே நாட்டில் 66 சதவீதம் உழைத்து தருபவன்; இந்த நாட்டுக்காகவே உழைத்து உருக்குலைந்து போனவன் — அவனுடைய கைபட்டால் காடுகள் எல்லாம் நாடாகி கனிகளாகி பொன் கொழிக்குமே! அப்படிப்பட்ட தொழிலாளி குடியேறக் கூடாதா? குடியேறினால் விவசாயம் வளராதா? இப்படி இனவெறிக் கூத்தாடினால் நாடு சுபீட்சம் அடையமுடியாது.

உங்கள் கொடுமையைக் கண்டு ஆறுகுளம் எல்லாம் வற்றிப்போகிறது! ஒருசில எட்டப்பர்கள் சொல்லுகிறார்கள்-சிறிமா கிழக்கில் காலடிவைத்ததும் மழை பெய்கிறது விவசாயம் நன்கு வளர அறிகுறி இது என்று. நான் சொல்லுகிறேன், கொடுங்கோல் ஆட்சி தலைவி புனித பூமியான திருமலையில் காலடி வைத்தது மகா பாவம், அந்த காலடி அழியவே— அவர்களின் கொடுங்கோலை துடக்கு அழியத்தான் — இந்த மழை பெய்கிறது.

தம்மைத் தாமே வருத்தி தம் உரிமை வேண்டி கிடக்கும் இளைஞர்களின் உணர்ச்சியைக் கண்டு தமிழ்த்தாய் ஆனந்தக்கண்ணீர் வடிக்கிறாள், நாடு செழிக்க பசி பட்டினி இல்லாமல் மறவர் குடி வாழ! ஆனால் அந்த மறவர் குடியேற அனுமதி மறுத்த அம்மையார் வந்தால் அம்மையாரின் அழுக்கு தீர அடைமழை பெய்கிறது. இதை ஆண்ட பரம்பரை பார்த்துபூரிப்பு அடைகிறது. அநியாயம் செய்வோருக்கு அகால மழை வந்து அழிக்கும்!

ஆட்சியாளருக்கு ஒன்று கூறவிரும்புகிறேன். நாடுவிவசாயத்தில்முன்னேற வேண்டுமானால் முதலில்:

(1) அரசியல் தலைவர்கள் என வைத்து இருக்கும் எட்டப்பர்களை மாற்றிகூட்டணி தலைவர்களை போடுங்கள்.

(2) தோட்டத் தொழிலாளி வடக்கு கிழக்கில குடியேற அனுமதியுங்கள்.

(3) விவசாயம் செய்யும் மக்களுக்கு வீண் தொல்லை கொடுக்காதீர்கள்.

(4) தமிழ் மக்களின் உரிமைப்பிரச்சினையை தீருங்கள் உரிமைக்கு குரல் கொடுக்கும் தலைவர்கள் உணவு உற்பத்திக்கு குரல் கொடுப்பார்கள் இல்லாவிட்டால ஐந்து ஆண்டு திட்டம் ஐந்து நிமிடத்தில் உடையும். இதை ஆட்சியாளர் மறக்க வேண்டாம்.

(5) உடனடியாக பன்குளம் பகுதியிலிருந்து ஆகாயப்படையை எழுப்புங்கள். அந்த இடத்துக்கு இளைஞர்களை திரட்டி தருகிறோம்.

(6) புனானையில் குடியெழுப்பப்பட்ட மக்களை மீண்டும் குடியேற்றுங்கள் —

(7) சிறையில் இருக்கும் இளைஞர்களை விடுதலை செய்யுங்கள் —

இவ்வளவையும் செய்யுங்கள் நாடு சுபீட்சமடையும் — இல்லாவிட்டால் நாடு சுருண்டு போகும்!!

## இயற்கைமேல் என் கேள்வி?

—அண்ணாதாசன், வந்தாறுமூலை.

ஏடவிழ்ந்த தாமரையே! அன்னக் குஞ்சே!
எழில் குலுங்கும் சோலையில் வான் குயில்களே! நீர்
பாடல் பெற்றீர் பாவலனால் அன்று. எங்கள்,
பைந் தமிழன் கோல்பிடித்த காலம் தன்னில்
கோடல் பல இக்காலத் தமிழர் வாழ்வில்
கொலைக் களத்தில் வாழ்வதுபோல் எமது வாழ்வு.
ஓடலுக்குக் காரணமென்? உணர்வீரா நீர்?
உண்மையினை உணர்வீரேல் உரைப்பீர் கேட்பேன்.

சாதலுக்கு அஞ்சாத தமிழ வீரன்
சாமிமலை தோளெடுத்த மறவர் சிங்கம்
கோலெடுத்து ஒருகாலம் ஆட்சிசெய்த
குன்றத்தின் குன்றெங்கள் இராவணேசன்
பாலெடுத்துக் கொடுத்தீழத் தமிழநாட்டைப்
பார்முழுதும் புகழ் மணக்கச் செய்தல் கண்டு
நாலடுக்கு மாடியெலாம் கடலாற்கொண்ட
நாளெண்ணத் துடிக்கிறதே தமிழ நெஞ்சு.

நீர் இதற்கு விடை என்ன கூறுகின்றீர்?
நீணிலமெல்லாமாண்டோம் என்று கூறி
மார் அடித்து நின்றிட்டாற் போதுமாமோ?
மறத்தமிழராய் வாழமுடியாதென்று
வாளெடுத்துக் கொடுத்தெமது வாழ்வைக் கொல்ல
வழி செய்யும் வாழ்வும் ஓர் வாழ்வு என்றால்...
நாள் கடக்கும் எனச் சொல்லி நக்கல் நன்று
நாயென்று தேவையிலே படைப்பு இங்கு.

நாள் இறக்கும் பிறக்கின்ற நாளே! கேளு;
நாளுக்கு நாளெம்மைக் கீழே தள்ளி
பாழ்படுத்தும் செயல்முறைகள் கோடி, கோடி
மகட்டுக்காய் உருகுவதோ பாடிப், பாடி.
கூழ்குடித்து வாழ்ந்தாலும் தமிழன் வாழ்வு
குலமானம் காப்பதுவாய் அமையுமன்றி
தாழ்பணியும் வாழ்வு...சீ தமிழ வாழ்வா?
தரங்கெட்ட செயலுக்கு மகுடம் சூட்டா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

![கவிதைப் பூங்கா]

# கவிதைப் பூங்கா

## புது நீதி படைத்திடுவோம்!

— பங்கயமணாளன் —

புண்ணிய மனைத்துமோர் புத்தொளியாகிப்
    பூத்திடும் நம்மிடையே   எங்கள்
திண்ணிய தோள்வலி; சத்தியத்தின் அறம்
    சேர்த்திடும் நம்மினத்தை — சங்கம்
கண்ணெனக் காத்ததோர் தங்கத் தமிழினைக்
    காத்திட நாம் துணிந்தோம் — இந்த
மண்ணில் நமக்கென நாடது தோன்றிடும்
    நாளினை நாம் நினைப்போம்!

ஆண்டபரம்பரை மீண்டும் ஒருமுறை
    ஆள நினைப்பதிலே — இங்கு
யாது குறையெனக் கூறி விழித்தவன்
    வாழும் சிறையதனை — எங்கள்
மாண்புத் தமிழ் மணம் பூக்கும் நிறைவனம்
    ஆக்கி மகிழ்ந்திடுவோம் — அவன்
மீண்டு வருகையில் வாவெனக் கூறிடும்
    நாடு சமைத்திடுவோம்!

எங்கள் இளைஞர்கள் செங்குருதிக் கடல்
    எங்கும் நிறைந்தது காண்! — அவர்
பொங்கி யெழுந்தனர்; பசுமைப் புரட்சியிற்
    தம்மை மறந்தனர் பார்! — இனி
எங்கும் பயிர்வகை! எங்கும் உணவெனத்
    தங்கும்படி யுழைப்பார்! — அறம்
பொங்கும் உணர்ச்சிகள் போற்றியே மானமாம்
    தங்கப் பயிர் வளர்ப்பார்.

எல்லையிலாக் கடல் தன்னில் மறவர்கள்
    எழுச்சியுடன் புகுந்தார் — தொழில்
இல்லை யெனுங் கொடுஞ் சொல்லையழித்திட
    எட்டுத்திசை வளர்ந்தார் — இங்கு
தொல்லையினியிலைத் துணிவே துணையெனத்
    தோளை யுயர்த்தி நின்றார் — பெருங்
கல்லை, மலையை யுருட்டிக் களத்தினிற்
    கலைகள் படைக்க நின்றார்.

சாதியெனுங் கொடுஞ் சாத்திரம் தன்னை நம்
    காலடியிற் புதைப்போம் — அது
பாதியிலே வந்து பைந்தமிழன் பலம்
    போக்கியதை நினைப்போம் — புது
நீதியிலே யெங்கள் பண்பதனை நிலை
    நாட்டி மகிழ்ந்திடுவோம் — நடு
வீதியிலே யொரு வயிறு கொதிக்கினும்
    அந்நிலை மாற்றிடுவோம்!

---

## துடிப்பு

—சேரன்

விட்டுக்குள்ளே இருந்து கெடுக்கும்
  ஒட்டுண்ணிகள் போலே—தமிழில்
மொட்டைத் தமிழர் சிலரால் தமிழின்
  மானம் போகுதடா!
விட்டுக் கொடுக்கும் தமிழர் பெருங்குணம்
  அற்றுப் போனதடா—நெஞ்சம்
எட்டுத் திக்கும் தமிழன் புகழை
  நாட்டத் துடிக்குதடா!
பட்டுப் போன்ற தமிழர் நெஞ்சம்
  கெட்டுப் போனதடா—ஆட்சியின்
சட்டம் திட்டம் தவிடுபொடியாய்
  ஆக்க நினைக்குதடா!
பட்டம் பதவி எல்லாம் எமக்குச்
  சின்னத் துரும்படா!—நீலக்
சட்டம் போட்ட சிவப்புச் சட்டையுள்
  ஆணவம் சிரிக்குதடா!
தட்டிக் கேட்கும் நிலையில்—தமிழன்
  ஆண்மை துடிக்குதடா!

---

## வலிவின்றி வாழலாமோ?

—அக்கரை மாணிக்கம்—

ஒலித்திடும் முரசும் சங்கும்
உணர்ச்சியை ஊட்டி நெஞ்சில்
களிபெரும் உவகை கொண்டு
களத்தினை நோக்கிச் சென்று
புலியெனப் போரில் வென்று
புதுப்புது வாழ்வு கண்டு
வளமுடன் வாழ்ந்த இனம்
வலிவின்றி வாழலாமோ.

அகம்புறம் நானூறும்
அழகிய சிலப்புப் பாட்டும்
தகுந்த நல்லுலாவும் சீரும்
தமிழர் தம் சிறப்புக்கூறும்
தொகைகளும் குறளும் வீரம்
தோய்ந்த பரணியும் பதிற்றுப்பத்தும்
புகல்கின்ற செய்தியாவும்
பொய்யாகிப் போச்சோ இன்று

கலைகளில் புதுமை கண்டு
கவியினில் பிறரைவென்று
உலகினில் சிறந்து வாழ்ந்த
உயர் தமிழ் இனத்தால் இன்று
நிலையான வாழ்வுமின்றி
நெஞ்சினில் உரமுமின்றி
அலைகடல் துரும்புபோல
அனுதினம் வாழ்தல் ஏனோ?

# முத்தான மூன்று நகைச்சுவை கவிதைகள்!

## அரசு ஆதரவு தமிழ் தப்பட்டைகளுக்கு இவை சமர்ப்பணம்!

வளரும் நிலவு போல் — மலரும் தாமரை போல் மனித உள்ளம் வளர்ந்து கொண்டிருக்கின்றது. நாகரீகம், கலை, விஞ்ஞானம் இவை அனைத்தும் மனித உள்ளத்தின் வளர்ச்சியின் விளைவுகளே! விண்ணின் விரிவும், மண்ணின் வனப்பும், கடலின் பரப்பும் உள்ளத்தால் காணலாம், வெள்ளத்தனையது மலர் நீட்டம்; மாந்தர் தம உள்ளத்தனையது உயர்வு அல்லவா?

கவியின் உள்ளம் நினைத்த இடத்தை, நினைத்த போது சென்று பார்த்து வரும். வானில் பறக்கும்—கடலையே குடிக்கும்—விண்ணை இடிக்கும். கவியுள்ளத்தின் கண்களில் உலக வாழ்வில் காணப்படும் மற்றவர் கண்களுக்குத் தென்படாத உண்மைகளெல்லாம் தென்படும். நிகழ் காலத்தையும் எதிர்காலத்தையும் தீர்க்க தரிசனமாகக் காணும் இயல்பு அவர்களுக்குச் சொந்தமானதே.

### பொருத்தமான பாடல்

பண்டைய புலவர்கள் பாடிய பாடல்கள் என்றும் வாடாக்கற்பகமாக இன்றும்

# இலக்கியப் பூஞ்சோலை

பயனுள்ளவையாக — நாளையும் பயன் மிக்கவையாகஎன்றும் நின்று நிலவும் பாடல்களாக இருக்கின்றன. அப்பாடல்கள் சிலவற்றைப் படிக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அப்பாடல்கள் இன்றைய தமிழ் அரசியல்வாதிகள் சிலருக்கு மிகப் பொருத்தமாக இருக்கின்றது. அந்த நகைச்சுவைப் பாடல்களைப் படிக்கும்போது சில அரசியல் பயூன்கள் என் மனக் கண்முன் வந்து நர்த்தனமாடினர். அவர்களை தான் அடையாளம் காட்டுவதிலும் வாசகர்கள் பாடல்களைப் படித்து அவர்களை அடையாளம் கண்டு கொள்வார்களாக!

அப்பாடல்களையும் அவற்றிலுள்ள நகைச்சுவையையும் பார்ப்போம்.

### காளமேகத்தின் பாடல்

குரங்கென்று ஆரம்பித்து, இடமென்று முடிக்கும்படி ஒருவர் கவி காளமேகத்தைக் கேட்டார். கவிஞர், காளமேகமல்லவா? கம்மென்று ஒருகவிதையைப் பாடினார். பாடலில் குரங்கைக் காட்டினார். குரங்கு பார்ப்போரை நகைச்சுவையில் ஆழ்த்த வல்லது. பிறர் செய்வது போல் தானும் செய்து சேட்டைகள் புரிகின்றது.

காளமேகத்தின் குரங்கு வியப்பைத்தருகிறது. விகடத்தை ஏற்படுத்துகின்றது. இயற்கையிலேயே சேட்டைகளின் கொள்கலமாக இருக்கும் குரங்கு மேலும் சேட்டைகளின் சிகரமாகத் திகழ்கிறது இந்தக் குரங்கு தீயில் வீழ்கிறது. வெறி கொள்ளுகின்றது. வெறி கொண்ட குரங்கைத் தேள் கொட்டுகின்றது. பாம்போ அதன் கரத்தில் சுற்றிக் கொள்ளுகின்றது நண்டு காலைக் கடிக்கிறது. பேய் பிடித்து ஆட்டுகின்றது போதாததற்கு அக்குரங்கு [illegible] பச்சை மிளகைக் கடிக்கின்றது. வெந்த புண்ணில் வேல் பாய்ந்தால் எப்படியோ அப்படியேகுரங்கும்குரங்காட்டமாடுகின்றது.

இயல்பாகவே துள்ளும் குரங்கு அனலில் வீழ்ந்து புரண்டால் எப்படித் துள்ளும் என்று சொல்லவா வேண்டும்? மது அருந்தியவன் சேட்டைகள் செய்வது இயல்பு. சேட்டைக்கு இருப்பிடமான குரங்கே வெறி கொண்டுவிட்டால் அதன் சேட்டை கோமாளித்தனம், பழுகுட்டம் பற்றி எடுத்தி

## ந. சிவபாதம்

யம்ப முடியுமோ? இதோ பாடல் படித்துப்பாருங்கள்.

குரங்கனலில் வீழ்ந்து
வெறி கொண்டு
தேள் கொட்டக்
கரஞ்செறியப்
பாம்பலவன் கல்வி —
விரைந்து போய்
பற்றவே கள்ளுண்டு
பச்சை மிள
கைக் கடித்தால்
எத்தனைபார்
சேட்டைக்
கிடம்.

தமிழ் மக்களையும் இப்படிச் சேட்டைக் கிடமாக மதித்துக் குரங்காட்டம் ஆடுபவர் யார்? அவரைத் தேடிப் பிடித்து அவருக்கு இப்பாடலைச் சமர்ப்பித்து விடுங்கள்.

புலவருக்குப் பொருள் வேண்டும்; பொன்வேண்டும். புலவருடன் வறுமையும் கூடப்பிறந்து விடுகின்றது. அதனுற்ருன் ஒரு புலவன் கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானு? என்று விரக்தியின் விளிம்பி லிருந்து பாடுவானு என்ன? பெறவேண்டியபொருளோ ஏராளம் வரையாது வழங்கும் வள்ளவிடமில்லை. புல்லனிடத்தில் இருக்கிறது. புல்லனிடத்தில் வள்ளன்மை ஏது? அருள் ஏது? ஆனுல் புலவரிடத்தில் அருள் உண்டு. அந்த அருள் தான் புலவரைப் புல்லனையும் புகழ்ந்து பாட வைக்கின்றது. ஒருவனை இராமச்சந்திரக் கவிராயர் கண்டார். கல்வியில் பெரியனே — அரசனே — நல்லவனே — புலியே குன்றெடுக்கும் தோளனே — கொடை கொடுக்கும் வள்ளலே என்றெல்லாம் பலவாருகப் புகழ்ந்தார் பாராட்டுப் பெற்றவன் பொன்னையும் பொருளையும் அள்ளிக் கொடுப்பதே மரபு. ஆனுல் புல்லன் பரிசு 'இல்லை' என்று சொல்லிப் புலவரை அனுப்பிவிட்டான்.

புலவர் இல்லம் திரும்பினர். அவர் கற்பனு சக்தி பலவாருக எண்ண வைத்தது. புலவர் புல்லனை ஏசவில்லை. எண்ணி எண்ணி இரங்கினர். அவன் இல்லை என்று சொன்னது சரியே என்று முடிவுக்கு வந்தார்: குற்றம் செய்தது நானே; ஆகவே இல்லை என்று அவன் சொல்லியது தனக்குக் கிடைத்த தண்டனை என்று முடிவுக்கு வந்தார். பாடினர் அந்த நகைச்சுவைப் பாடலை!

கல்லாத வொருவனை நான்
  கற்ரு யென்றேன்
காடெறியு மவனை நா
  டாள்வா யென்றேன்
பொல்லாத வொருவனை நா
  னல்லா யென்றேன்
போர் முகத்தை யறியானைப்
  புலியே யென்றேன்
மல்லாரும் புயனென்றேன்
  சூம்பற் றேளை
வழங்காத கையனை நான்
  வள்ள லென்றேன்
இல்லாது சொன்னேனுக்
  கில்லை யென்ருன்
யானுமென்றன் குற்றத்தா
  லேகின்றேனே?

இது தான் தேர்ந்தெடுத்த இரண்டாவது பாடல். இந்தப் பாடலாலான தொப்பி யாருக்குப் பொருத்தமோ அவருக்கு போட்டுவிடுங்கள்.

பாரதியார் பேயும் பிசாசமென்று சிறுவர்களை ஏமாற்றுபவர்களை ஒரு பாடலில் சாடுகின்ருர். அருணசலக் கவிராயரோ பேய் இருக்கிறதா? என்ற வினவுக்கு விடை பகருகின்ருர். அவர் இறுக்கமான வாதம் பேய் உண்டு என்பதே! அந்தப் பேய் வேறெங்கும் வாழவில்லை; தம்மிடையே தான் வாழ்கின்றது.

மனிதர்களிலேயே அவர் பேயைக் காண்கிருர், எப்படிப்பட்டவனிடம் அவர் பேயைக் காண்கிருர் என்ருல் தன்னைப் புகழ்வான் — மன்றேரப் சொல்வான் — பாடுபட்டுத்தேடிப் பணத்தைப் புதைப்பான் — பகைவர் நயமொழி நம்பிக்கேட்பவன் — நாணமில்லான் — மையல் மாதர் மொழிகேட்பவன் இவர்கள்தான் பேயாவர் என்கிருர் கவிராயர். பேய் உள்ளம் இல்லாதது. மேலே குறிப்பிட்டோரும் உள்ளம் இல்லாதவரே. ஆகையால்தான் பேய் என்கிருர் புலவர். பேய் கண்டால் அஞ்சக் கூடியதோற்றமுடையதென்று வருணிப்பர். இவர்களும் அஞ்சக் கூடியவரே. ஆதலால்தான் இவர்கள் பேயாவர் என்கிருர். பேய் என்றும் நன்மைசெய்யாது. தீமைதான் செய்யும். இவர்களும் இத்தகையோரே. அவர்களைக் கவிஞர் அடையாளம் காட்டுகின்ருர்.

தன்னைப் புகழ்வானுஞ்
சாட்சிசொல்லி நிற்பானும்
  பொன்னை மிகத்தேடி
புதைப் பானும்—
  தென்னவர் தம்
நன்புத்தி கேட்பானும்
  நாணமில்லா தானும்
பெண்புத்தி கேட்பானும்
  பேய்.

அரசாங்கத்திற்கு வக்காலத்து வாங்கி பேய் பிடித்தவன் போல் — சன்னி கண்டவன் போல் அலட்டித் திரிந்து அரசாங்கத்திற்குத் தமிழனைக் காட்டிக்கொடுக்கும் கயவனுக்கு இப்பாடல் சமர்ப்பணம்.

---

## இலக்கிய மன்றத்தின் ஒத்துழைப்பு

அடுத்த தை மாதம் யாழ் நகரில் நடைபெறவுள்ள அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மாநாடு பூரண வெற்றி பெற உள்நாட்டு இறைவரித்திணைக்களத் தமிழ் இலக்கிய மன்றம் தனது முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் நல்குவதென 12-10-73ல் கூடிய அதன் செயற்குழு கூட்டத்தில் தீர்மானித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது


## இப்பொழுது 3-வது வாரமாகக் காட்சியளிக்கின்றது!

**சென்ட்ரல்** (மருதானை) **ராணி** (யாழ்நகர்) **ஈரோஸ்** (பாமன்கடை)

தினசரி 2—6—9.30 ஞாயிறு காலை 10மணி 10.30—2.30—6.00—9.30 மணி 2—6—9.30 ஞாயிறு காலை 10மணி

இதயத்தை உருக்கும் தாயின் அன்பு! அழகும், வலிமையும் அன்புக்கு நிகரில்லை!

தாய், தந்தை, சகோதரர்கள் மெச்சத்தகுந்த ஓர் சித்திரம்!

இக்கதையின் முடிவை யாருக்கும் சொல்லாதீர்கள்!

சிரிப்பும், அழுகையும் சரிவர நிறைந்த எல்லோரும் பார்க்கவிரும்பும் உன்னத நடிப்பு!

ஜெயா, முத்துராமன், சாவித்திரி, சகுந்தலா, சோ, மனோரமா நடித்த—

# பெத்த மனம் பித்து

(பாஸ்கள் ரத்து)



## 3வது வெற்றி வாரம்

**கிங்ஸ்லி** (கொழும்பு) **பிளாசா** (வெள்ளவத்தை) **வெலிங்டன்** (யாழ்நகர்)

ஜெமினி, ஜெயந்தி, நாகேஷ்,
முத்துராமன், M. R. R. வாசு,
சுந்தரராஜன் A. சகுந்தலா

—நடித்த—

கே. பாலசந்தரின்

# புன்னகை

இது ஒரு வழக்கமான கதையல்ல
வாழ்க்கையில் அடி எடுத்து வைக்கும்
நால்வரின் குறைநிறைகளை
விமர்சிக்கும் ஒரு கட்டுரை...

**முதன் முதலாக**

ஒரு திரைப்படமாக வந்திருக்கிறது

# சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில்

இப்பொழுது
காட்சியளிக்கிறது

எம்.ஜி.ஆர்-சரோஜாதேவி
நம்பியார் நடித்த-

## அரச கட்டளை

**செல்லமகால்**
திரையில்

## வெகு விரைவில் எதிர்பாருங்கள்!

**செல்லமகால்** | **கெபிட்டல்**

மக்கள் கலைஞர்

## ஜெய்சங்கர்

தேங்காய் சீனிவாசன்
சோ,
எம். ஆர். ஆர், வாசு,
பாரதி—எம். என். ராஜம் நடித்த—

## உனக்கும் எனக்கும்

நாகேஷ்,
வி. கே. ராமசாமி,
எஸ். வி. சகஸ்ரநாமம்,
வி. எஸ். ராகவன்,
லட்சுமி - ரமாபிரபா,
காந்திமதி - பார்வதி நடித்த—

## நவாப் நாற்காலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194 ம் இலக்கத்தில் 1973ம் வருடம் நவம்பர் மாதம் 11-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.